உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக "—திருக்குறள்.

தொகுதி 10	காலயுக்தி வருஷ சித்திரை மீ	பகுதி 4.
Vol-X	MAy 1918.	No 4.

ஸ்ரீ:

கல்வியே தேசங் காக்குங் கருந்தனம்.

உலகமே ஒரு தக்க மாறுபாட்டையடைதற்குரிய ஆயத்தத்திலிருந்துகொண்டிருக்கும் இந்த நற்காலத்திலே, கல்வியின் ஆவசியகத்தைப்பற்றித் தெரிந்துகொள்ளாதவர் இருக்கவே மாட்டார் என்று திண்ணமாக எண்ணுகிறோம். உலகினருள்ளும், இந்தியரோவெனில், தற்கால மாறுபாட்டை நன்றாகக் கவனித்துவருவதுடன், அம்மாறுபாட்டில் தாங்கள் எவ்வகையான திருத்தத்தை யடையவேண்டுமென்பதையும், அதற்கேற்பத் தங்களை யெவ்வண்ணந் திருத்திக்கொள்ளவேண்டுமென்பதையும் நன்கு ஆலோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தற்கால இந்தியாவானது தக்கபடியான சீர்திருத்தத்தையடைந்துகொண்டே வருமானால் " தன்னரசிந்தியா " என்று அழைக்கப்படும் நற்காலத்தையும் அடையுமென்று ஊஹிக்க இடமிருக்கிறது. தன்னரசிந்தியாவாக வேண்டுமானால், அதன் மக்களைத் தேசீயக்கல்வியில் தேர்ச்சியடையும்படியாகச் செய்விக்கவேண்டுவதே தக்கமார்க்கமாகும். இம்முறையைக் கைப்பற்றுவதே முக்கியமாகுமென்று பற்பல மேதாவிகளும் பற்பலமேடைகளில் நின்று கதறிக்கொண்டிருக்கிறார்கள்.

தன்னரசுரிமைச்சங்கமெனப்படும் ஹோம்ரூல் சங்கமும் சுதேச சர்வகலாசங்கமும் ஸ்தாபிக்கப்பெற்று அவைகள் தளர்ச்சியடையா திருந்து முன்னேறிவருந் தற்காலமே தேசியக்கல்வி ஸ்தாபனத்துக் குத் தகுந்த காலமாகும். அவ்விரண்டும் முன்னரேற்பட்டதே இக் கல்விமுறை யாரம்பஞ்செய்வதற்கு முற்போக்கான நற்சகுனமாகும். சுதேசசர்வகலாசங்கத்துக்குத் தேசியக்கல்விமுறையைய நுசரித்த ஒவ் வொருபிரிவினரும் தத்தமது பிரதிநிதிகளையனுப்பித் தத்தமது கொள் கைகளை யவர்களுக்குத்தெரிவித்தும் அவர்கொள்கைகளைத் தாந்தெரிந் துகொண்டும் முக்கியமான அம்சங்களைத் தத்தம் மாகாணங்களினும் சங்கங்களினும் பரவச்செய்வதே முதன்முதலிற் செய்யவேண்டிய காரியமாகும். அதனுற் சிறுகச்சிறுக அபிப்பிராயபேதங்கள் நீங்கிப் போய் ஸமபாவனையும் ஸமபுத்தியும் நிலைபெறும். இப்படியாக ஒரு தேசத்தின் முக்யகொள்கைகளில் உள்ள அபிப்பிராயபேதங்கள் ஒழிந்துபட்டு யாவருங்கூடி ஒருதிறமாக ஒத்துழைக்கநேரின், அதுவே தன்னரசுக்குரிய சக்தியும் காலமுமாகும். தற்காலக்கிளர்ச் சியும் அவ்விதமான தேசியக்கல்விமுறைக்கு ஒரு நல்ல தூண்டுகோ லாக இருக்குமேனும், அவ்விதக்கல்வியில் விரைவில் முன்னேற்ற மடையாதவரையில், கோரியபலனை விரைவில் எதிர்பார்க்கமுடியாதவ ராவோம். ஆகலின், இக்கிளர்ச்சி வெகுவிரைவிற் பலனையளிப்ப தற்குக் கல்வியே தக்கதொருகாலாம்.

உலகத்திலுள்ள மற்றை நாடுகளைக் காட்டிலும் நம்மிந்தியநாடா னது வெகுவிரைவில் ஒத்தவகையான சீர்திருத்தத்தை யடையத்தக்க பின்னனுபவங்களைத் தெரிவிக்கும் காரணங்கள் இருக்கின்றன. இது மிகப்பழையதான ஒருதேசம். ஆத்மதத்வவுணர்ச்சியில் மற்றை எத் தேசத்திலும் முன்னேறியிருக்கிறது. அறிவிலும் அநுபவத்திலும் ஆழ்ந்திருக்கிறது. பின் நேரும் நிகழ்ச்சிகளனைத்தினையும் முன்னரே யறிந்துசொல்லும் மேதாவிகளது முதுமொழிகளை நிரம்பப்பெற்றுள் ளது. "துன்புளவெனினன்றோசுகமுள" வெனும் பெருங்கொள் கையைக் கைப்பற்றிச் சுகம் துக்கமிரண்டினும் ஒருபடித்தாக இருக்

கும் கொள்கையிற் பழகியுள்ளது. "வருந்திவந்தவர்க்கு ஈ த லு ம்
வைகலும், விருந்தும்" அளிக்கும் வள்ளன்மையிற் சிறந்துள்ளது.
மற்றைநாட்டார் நவீனமாக முன்னேறிவரும் லௌகிக தர்மங்களின்
சூக்ஷ்மாம்சங்களைத் தெய்விகத்திலும் வேதசாஸ்திரத்திலும், மனு
தர்மத்திலும் மானவதர்மசாஸ்திரத்திலும், அநுபவத்திலும் அர்த்த
சாஸ்திரங்களிலும், பூர்விகமான பூர்ணவகைகளிலும் பெற்றுள்ளது.

இங்ஙனம் கிடைத்துள்ள சாஸ்திரார்த்த சூக்ஷ்மங்களை யாவரும்
எளிதிலுணர்ந்துய்யும்படியாகத் தொகைவகை விரியால் எளிமையில்
தந்தும் அவற்றுக் கேற்ற அநுபவமுறைகளை எடுத்துக்காட்டியும்
அநுகுணமான யுக்திவாதங்களால் நிரூபித்தும், அவற்றுக்குப்பிரத்
தியக்ஷப்பிரமாணமாக இதரநாட்டினரது விருத்தியம்சத்தைத் தெரி
வித்தும் முன்னுக்குக் கொண்டுவருவதற்கு வழியைக் கல்விமுறையா
லல்லாமல் வேறொன்றினாலும் எளிதிற் பெறமுடியாதவராகிறோம்.
அதற்குத் தக்ககாலமும் இதுவேயாம். இப்போது தேசத்தினர்
யாவரும் ஒருமனப்பட்டு உழைத்துவருங் காலமாக இருக்கிறது. நில
மெல்லாம் கொத்திக்கிளறப்பெற்றும், மேடுபள்ளமில்லாமற் சமதரை
யாக்கப்பெற்றும், கல் கரடு முள் முருடு இவைகள் நீக்கப்பெற்றும்,
சூர்யோஷ்ணத்தால் நன்றாகஉலர்த்தப்பெற்றும் இருக்கும் சமயத்தி
லே எருவேற்றி நீர்பாய்ச்சி யுழுது விதைத்திடுவோமானால், முளை
இளம்பிப் பரந்து விரிந்து சுற்றும் முற்றிக் கதிர்த்து முதிர்ந்து கோரி
யபலனைக் கோட்டைகோட்டையாகக் கொடுக்குமன்றோ?

இந்தியர் மனமாகிய நிலமும் இவ்வகையெல்லாம் நன்குபெற்றி
ருக்கிறது. பல்லாண்டுகளாகப் பலஅரசர்களது பலாத்காரவரிகளாற்
கொத்திக் கிளறப்பெற்றிருக்கிறது. ஏற்றத்தாழ்வுகளெல்லாம் சமமாக்
கப்பெற்றுவருகின்றன. கசடும் முசிறும் களையப்பெற்றுவருகின்றன.
பஞ்சங்களாகிய பெருந்தாபங்களாற் பக்குவம் பெற்றிருக்கிறது. மேலை
நாகரிகமாகிய எருவேற்றப்பெற்று லௌகிகவுணர்ச்சியாகிய நீர் பாய்ச்
சப்பெற்றிருக்கிறது. இச்சமயத்தில் தேசியக்கல்வியாகிய வித்தும்

விதைக்கப்படின் அயர்லாந்தின் சுயராஜ்யக்காற்று வீசிக்கொண்டிருக்கும் தக்கசமயத்திலே நல்லமுளைகள்கிளம்பி நன்றாற்றுக்களாகிப் பலர் மனேநிலையில் ஒருமனமாகப் பரப்பப்பெற்றுக்கோரிய பலனைக் கோட்டை கோட்டையாகத் தரும் என்பதில் என்னதடை? ஆகையாற் கல்வியாகிய கருந்தனத்தைக் கைசோரவிடாமற் கழகங்களிற் கருத்தொருமித்து இறையுங்கள்.

சுமார் நானூறுவருஷகாலங்களாக நமது நாட்டிற் குடியேறிய பிறதேசக்கல்விமுறையானது, நமதுபூர்வீகமான குலத்தையும் குணத்தையும் குடியோட்டிப் பலத்தையும் பணத்தையும் பாழ்படுத்தி, வீரர்களை வீணர்களாகவும், தீரர்களைத் தீனர்களாகவும், உற்றாரை யற்றார்களாகவும், உகந்தாரை யிகந்தாராகவும், நல்லோரை அல்லோராகவும், நாட்டாரை ஒட்டாராகவும், மாட்டாரை மனிசராகவும் செய்து, நிலத்தை நிர்மூலமாக்கி, நலத்தை நாணமாக்கி, உண்டிவகைகளைப் பிண்டிவகைகளாக்கி, ஆடைகள்தம்மைப் பீடைகளாக்கி, உற்றாருடன்செற்று ஊரார்களுக்கு அழுது வீணுக்கு உழைத்து விழலுக்கு நீர்இறைக்கச் செய்து, உடையும் உண்டியும் வேற்றூர்கொடுக்க வேண்டிப்பெற்று நிற்க நிழலற்று இருக்க இடமற்றுப் படுக்கப் பாயற்றுத் தரையிற் கிடந்து தடுமாறவும் செய்துவிட்டது.

இன்னும் அந்தக்கல்விமுறையினுல் உபதேசிகளெல்லாம் விபதைகளானுர்கள். குடியர்களுங் குருமார்களானுர்கள். ஊர்காலிகளும் உத்யோகிகளானுர்கள். நிறையில்லாமொழியுடையாரும் நியாயாதிபதிகளானுர்கள். குலப்பெருமையுங் குடிப்பெருமையுங் குணப்பெருமையுங் கவனிக்கப்படுவன இல்லை. நீதிப்போக்குகளுந் தாரதம்மியத்தையே நாடியிழைக்கப்படுகின்றன. பஞ்சங்களோ தஞ்சங்களாகப்பரந்து வருகின்றன. யாரும் எவ்வகைத்தொழிலிலும் நிலைத்திருக்கமுடிகிறதில்லை. தாந்தோன்றித் தம்பிரான்களாகித் தடிகொண்டார் தண்டற்காரர்களாகிக் கண்டதேகாட்சி கொண்டதே கோலமுடையவர்களாகி, அடித்தேனும் முடித்தேனும் அழுதேனும் தொழுதேனும் வயிறு

வளர்ப்பதே வானுலகின்பமாக அனுபவித்துவருகிறார்கள். இதனால் சிறியோர்க்கும் பெரியோர்க்கும், மெலியோர்க்கும் வலியோர்க்கும், உத்யோகிகட்கும் உழைப்பாளிகட்கும், ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கும் இடையில் உட்கலகங்களுண்டாகி உலகந் தர்மமுறையில் தடுமாறி யிருக்கிறது.

ஆனால் சுதேசக்கல்விமுறை ஆரம்பிக்கப்பெற்று நிலையாக நடைபெறுமானால், தேசம் தேசமாகி மனுஷத்தர மதிகரித்து ஒற்றுமை கைகூடி உபகாரசிந்தை மேலிட்டு உண்பதும் உடுப்பதும் ஒழுங்காகி நிற்பதும் நடப்பதும் நேராகி வீணர்களும் வீரர்களாகித் தீனர்களும் தீரர்களாகி, அரசுரிமைக்கு அன்பும் ஆதரவுமே ஊன்றுகோலாகிக் குடியர்குறைந்து கள்வர்கழிந்து மடியர்கழிந்து மாள்வார்குறைந்து ஆக்கள் பெருகி அறவோர்சிறந்து அரசுமோங்கி அருளே தழைக்கும். ஆகலின், தேசியக்கல்விமுறையே தேசத்துக்குரிய முறையாகும்.

ஆக, இந்தியரின் சிக்குகளை யறுத்தற்குரிய இத்தேசியக் கல்விமுறையானது, இந்தியர்களின் நரம்புகளில் ஏற்றப்பெற்ற போலிச் சாயங்களை யெல்லாம் கழித்துச் சுத்த நரம்புகளாக்கி, இந்தியதேச ரத்தம் எங்கும் சுழன்று ஓடச்செய்யும். இந்தியாதேசமாகிய உடம்பில் ஊறிக்கிடக்கும் அபிப்பிராய பேதங்களாகியநோய்களைப்போக்கிச் சுதேசவிரோதிகளையும் தூயராக்கும். பழையமாதிரியான நல்லொழுக்கங்களை நன்குபடரச்செய்யும்.

கல்வி என்றதன் சொல்லிலக்கணத்துக்கிணங்க, மனிதர்மனமாகிய கல்விப் பண்படுத்தப்பட்ட நிலத்தில் நல்லுணர்ச்சியாகிய வித்தினை யிட்டோமானால் நன்குவளர்ந்து நலமேதரும். இந்திய நிலத்தில் இந்திய வித்தினையிட்டுப் பயிராக்குவதுபோல அந்நியவித்து அதிகம் தழைக்காது; அப்படிச் சிறிது தழைப்பினும் மணமுள்ள மலரும் மதுநிறைந்த கனியும் தராது: மலர்ந்தமலரும் கனிந்தகனியும் கண்ணுக்கும் காதுக்கும் ஒருவாறு விசித்திரமாக இருக்குமன்றி நாசிக்கும் நாக்குக்கும் நன்மைதரா. ஆக, மலரினியற்கையும் கனியினியற்

கையும் மாறுபட்டிருக்கும் என்பது விளக்கமாகிறது. ஆகலின், ஒருதேசத்தில் அத்தேசத்துக்குரிய வித்தே விதைக்கப்படல் வேண்டும். ஒருதோட்டத்தில் அல்லது ஒருபங்களாவில் அந்நியவிதைகள் விதைக்கப்படின் அவைகள் உருவம் பலவாய் ஓங்கிவளர்ந்து காண்பார் கண்களைக் கவர்ந்தெழுந்து ஏதும்முதவாதேக்கற்றிருக்கும். சொந்தவித்திடப்படின், பொன்றுதெழுந்து நன்றாய்வளர்ந்து, புது மலர்மலர்ந்து மதுக்கனிதந்து, உண்டியை உடையை உவப்ப அளித்து மண்ணில் நல்லுரம் மாற்றிக்கொடுத்து மன்பதைகளிக்க மன்னியே பெருகும். ஆக இந்த வியாஸத்திற் கல்வியென்றெடுத்துக் கொண்டது தேசியக்கல்வியென்றே பொருள்படுமாறு வைத்துளேம் என்பதை வற்புறுத்தலானேம்.

கல்வியென்பது, உலகத்துக்குரிய உண்மையான அநுபவமே பிரதிபலிக்கப்பெற்றும் சூத்திரிக்கப்பெற்றும் மேதாவிகளால் ஒப்புக்கொள்ளப்பெற்றுமிருக்கிற உணர்ச்சிகளை யுணர்த்துவதேயாகும். ஒருபேரண்டத்துக்கும் ஒருசிற்றண்டத்துக்கும் ஸூக்ஷ்மாம்சங்களில் வித்யாஸமே கிடையாது. ஸூக்ஷ்மதர்மங்களெல்லாம் இரண்டிலும் ஒத்தனவாகவே அமைக்கப்பெற்றுள்ளன. ஆகச் சிற்றண்டம் சிறிது தர்மத்தில் மாறுபட்டால், சுழற்சியில் அது பேரண்டத்தையும் தாக்கிக் கலக்குமென்பதாம். ஆகலின் சிற்றண்டத்துக்குச் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு மனிதனும் பேரண்டத்தினுடைய சம்பந்தத்தையும் பெற்றுள்ளவனாகிறான். அவனது தர்மம் சிறிது மாறுபட்டாலும் உலகப் பொதுத்தர்மத்திலும் மாறுபாடு உண்டாகும். உலகம் சரியான சீர்திருத்தத்தை யடையவேண்டுமென்றால், ஒவ்வொரு மனிதனும் திருத்தமடையவேண்டுவதே. ஆகையினால், கல்வியென்பது, உலக அனுபவத்தின் பொதுத்தர்மாநுஷ்டானங்களைப் பக்குவமாக ஒவ்வொருவருக்கும் போதிப்பதேயாகும். ஆக இந்திய தேசீயக்கல்வியென்பது இந்தியப்பொதுத் தர்மாநுஷ்டானங்களை ஒவ்வொருவருக்கும் போதிப்பதாகும்.

கல்வியென்பது, ஒருமனிதனை நல்லஆலோசனையுள்ளவனாகத் திருத்துவது. ஆத்மவுணர்ச்சியில் முன்னேற்றமுடையவனாகத் திரு

த்துவது. பரிசுத்தமனமுடையவனாகச் செய்வது. துக்க நிவிர்த்தியுள்ளவனாகச் செய்வது. பரோபகாரசிந்தையுள்ளவனாகச் செய்வது. தெய்வசட்டத்துக்குக் கட்டுப்பட்டவனாகச் செய்வது. உலகதர்மத்துக்கு வழிகாட்டியாகச் செய்வது. பொதுத் தர்மாநுஷ்டானங்களை நடத்திக்காட்டுபவனாகச் செய்வது. துன்பங்களைப் பொறுப்பவனாகவும் இன்பங்களை இச்சியாதவனாகவும் பொதுக்கடமைகளை ஊக்கத்துடன் செய்ய முன்வருபவனாகவும் செய்வது. மதப்பற்றுடையவனாகச் செய்வது. மனுஷசக்தியில் தெய்வசக்தியைப் புகுத்துவது.

முக்யமாகக் கல்வியென்பதை, ஆத்மவுணர்ச்சியின் சுருளைக் குலைத்தும் கவசத்தையறுத்தும் உலகப்பொதுத் தர்மத்திற் செலுத்தும் ஒரு முற்போக்கென்றே சொல்லலாகும். அது ஒருமனிதனைத் தன்னையும் தன்வலிமையையும் தன்கடமைகளையும் தன்னைச் சூழ்ந்துள்ளாரையும் சூழ்ந்துள்ளவற்றையும் தன்னோடு அவற்றுக்குண்டான சம்பந்தத்தையும் தனது தலைவனையும் அவனது சம்பந்தத்தையும் அறிந்துகொள்ளும்படி செய்விக்கிறது. இப்பொருள் எங்கும் எல்லாராலும் கொள்ளக் கிட்டுவதொன்றே. இப்பொருள்களை நாம் ஒப்புக்கொள்ளவேண்டியது அவசியமாகிறது. ஆகலின் இந்தியப்பொதுத் தர்மங்களின் அனுஷ்டானத்திலிருக்கும் ஒரு ஆத்மாவுக்கு இந்தியப் பொதுத் தர்மவுணர்ச்சியையே போதிப்பது இந்தியக் கல்வியாகும்.

கல்வியென்னும் பதத்துக்கு இத்தகைய பொருள்களெல்லாம் இருப்பினும், அக்கல்வியைத் தக்கமுறையிற் பயிலாதவரையிற் பயனென்பது ஒன்றுமே தராது. முறைப்படி பயின்று வந்தோமானாற் பொதுத்தர்மாநுஷ்டானங்களில் மற்றவரைச் செலுத்துவதற்கு ஒரு வழிகாட்டியாகவும், லோகவ்ருத்திக்குக்காரண பூதமாகவும், தெய்வசக்தியைக்காட்டும் ஆசாரியனாகவும் நின்று உதவும்.

இன்னும் கல்வியானது, நல்லமுறையிற் பயிலப்பட்டுவரும்போது வர்ணாச்சிரமதர்மங்களின் நிலையையும், ஒருஉபாத்தியாயன் ஒரு குரு ஒருஆசாரியன் இவர்களிருக்கவேண்டிய நிலையையும், உபாத்தியாயர் கற்றுச்சொல்லி, குரு சிஷ்யன், ஆசாரியன் அநுசாரி யாகிய இவர்களது

சம்பந்தத்தையும், யாருக்கு எப்போது எந்தவிதமானதர்மத்தைப்போதிக்கிறது என்னும் விவேசனத்தையும் நன்குதெரிவிப்பதுடன், உலக வியவஹாரத்திலும் ஆத்மாநுபவத்திலும் உண்டாகும் சந்தேஹங்களைப் பக்குவத்துக்கேற்றபடி விலக்குவதாகவும் இருக்கிறது. ஆகையாற் கல்வியானது, நன்றாகப் பயிற்றப்பட்டால், அநேகஉத்பாதங்களிலிருந்தும் நீக்காதா? வித்யாஸங்களை வேருடன் களைந்துவிடாதா? தேசபக்தர்களை யுறவினராக்காதா? கற்றவர்தம்மைச் சகோதரராகச் செய்யாதா? யாவரையும் ஒருகடவுளின் புத்திரர்களாகச் செய்யாதா? நமது கடமைகளை நன்கு உணர்த்தாதா?

ஆக இம்மாதிரியான கல்வியையே, ஒரு தேசத்தார் தமது தேசத்தினர்க்கோ, ஒருமாகாணத்தார் தமது மாகாணத்தினருக்கோ, ஒரு நகரத்தார் தமது நகரத்தினர்க்கோ, ஒரு குடும்பத்தார் தமது குடும்பத்தினர்க்கோ அவசியம் உதவ வேண்டியது. அப்படி யுதவாத வரையில் அவர் தமது கடமையைச் செய்தவராகார். உலகத்தின் பொதுக்கூட்டுறவில் தர்மங்களுக்கு விரோதமில்லாமல் அவரவர்கள் தத்தம் பக்துவத்திற்கு ஏற்பத் தத்தம் கடமைகளைச் செய்ய வேண்டுமென்பதே கடவுளின் கட்டளையாகும். அதனை மீறிநடப்பார் எவரேனும், அவருடைய கருணைக்குப் பாத்திர ராகார்கள். எனவே உலகில் நன்குமதிக்கப்பெறார். ஆகலின் இந்தியர்களாகி நாம் நமது கடமைகளைச் செவ்வைபெற நடத்தாதவரையில் நமதுகடமைகளை விட்டொழித்தவராகவே யாகிறோம். அதுவரையில் நாம் கடவுளின் கருணைக்கு அப்புறப்பட்டே இருப்போம். ஆகலின், நம்மவர்களை வற்புறுத்தியேனும் வழக்காடியேனும் நமது கடமையாகிய இந்தத்தேசீயக் கல்வியைப் போதிப்பதற்கு உரியவர்களாகிறோம்.

உலகத்தில் இருவிதமான மனிதர்க ளிருக்கிறார்கள். அவரவர் ஆத்மமுன்னேற்றம் இன்னதென்று அறிந்தவர் ஒருவகையார்; அதையறியாதவர் மற்றொரு வகையார். இவர்களுள் அறியாதவர்களுக்குப் புகட்டவேண்டியது அறிந்தவர் கடமையாகும்: ஒவ்வொருமதமும் இதனைத்தான் சொல்லுகிறது. ஒவ்வொரு தேசமும் இதனைத்

123

தான் செய்கிறது. ஆஸ்திகரும் நாஸ்திகரும் இதனையே கைப் பற்றவேண்டியது. இந்தக் கடமையைச் செய்வதே புண்ணியமென்று சொல்லப்படும்; இதனைச் செய்யாதொழிவதே பாவமென்று சொல்லப்படும். இந்தக் கடமையை வற்புறுத்துவதற்கே ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு ஜாதியினரும் புராணேதிஹாஸ சரித்திரங்களைப் புனைந்துவைத்திருக்கிறார்கள். அந்தந்தத்தேசத்துச் சரித்திரங்கள் அந்தந்தத்தேசத்தினரையும், அந்தந்தமதத்துச்சரித்திரங்கள் அந்தந்த மதத்தினரையும், அந்தந்த ஜாதியின் சரித்திரங்கள் அந்தந்த ஜாதியினரையும் அவரவரது கடமைகளிற் செல்லும்படி தூண்டுகின்றன. ஒருதேசத்துச் சரித்திரம் பிறதேசத்தினரையாவது ஒரு மதத்தின் உண்மைகள் பிறமதத்தினரையாவது ஒரு ஜாதியின் ஆசாரம் பிறஜாதியினரையாவது ஆத்மமுன்னேற்றத்திற்செலுத்தும் என்று எண்ணுவதற்கு இடமேயில்லை. இம்முறையிற் பயிற்றாத போது தேசகாலங்களை யிழந்தவர்களாகவே யாவார்கள். கடவுளின் சட்டத்தைக் கடந்தவர்களே யாவார்கள்.

இந்தியாவும் தனது தேசியமுறையில் ஆரம்பித்துள்ளது. ஒழுக்கத்திலும் உயர்ந்துவரும் என்று உறுதியாக நம்பியிருக்கிறோம். மதாசாரங்களை எடுத்துக்காட்டாமற் கல்வியைப்போதிப்பதிலாவது, ஒரு மதத்தினர்க்குப் பிறமதாசாரத்தைப் போதிப்பதிலாவது பயனில்லையென்பதைச் சுமார் 400 வருஷகாலக் கல்விமுறையில் தெரிந்திருக்கிறோம். ஆகலின் இந்துமதக்கல்வி இந்துக்களையும் மகம்மது மதக்கல்வி மகம்மதியர்களையும் கிறிஸ்துமதக்கல்வி கிறிஸ்தவர்களையும் பிறமதக்கல்வி பிறமதத்தினர்களையும் ஆத்ம முன்னேற்றத்திற் செலுத்தும். இந்தியசரித்திரக்கல்வியானது இந்தியர்களையும் பிறசரித்திரங்கள் பிறர்களையும் வீரராகச்செலுத்தும். இந்தியதேசக்கல்வி இந்தியரையும் பிறதேசக்கல்வி பிறதேசத்தினரையும் அவரவர் தேசத்துக்கு உழைக்கும்படியாகத்தூண்டும், ஆகையால், இந்தியர்க்கு வேண்டிய கல்வியைத்தரும் முறையே இந்தியமுறையாகும். மற்றமுறை பிந்திய முறையே யாகும்.

124

பிராசீனமுறைகளும் இம்முறையையே பின்பற்றியே நடந்தேறின. இப்போது நாமும் இம்முறைபற்றிவந்தோமானால் பிற்காலத்தவரும் இதனைப் பின்பற்றிவருவார்களென்பதில் ஐயமிராது. அப்போது தேசதர்மங்கள் உருக்குலையாதிருக்கும். அப்போதே தேசம் தனது காலால் நடந்துவரும். இல்லாதவரையில் பொய்க்கால்கொண்டே நடக்கவேண்டியிருக்கும். இம்முறையைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்றே பூர்வீகர் நமதுசாஸ்திரங்களையாக்கி வைத்திருக்கின்றனர். இம்முறையைப் பின்பற்றாதவராவோமாயின் சட்டத்தை யிகழ்ந்து சாஸ்திரங்களை யிகழ்ந்து சான்றோரை யிகழ்ந்து தர்மம் கெட்டவராகிறோம். கடவுளின் கருணைக்கும் அபாத்திரர்களாகிறோம்.

ஆகையால், வித்யாமுறையும் வித்தையின் பயனும் வித்யா இலாகாவின் செலவும் தேசியக்கல்வி முறையிலேயே பெருமை பெறும் என்று வற்புறுத்துகிறோம்.

பத்திராதிபர்.

தேசியக் கல்விச் சிறப்பு.

காப்புச் செய்யுள்

தேசியக் கல்விச் சிறப்புரைக்கச் சின்மயமாய்த்
தேசோ மயமாய்த் திகழீசா!—மாசாரும்
சிந்தை யுடைய சிறியேற்கு நல்லறிவு
தந்தருள்க; உள்ளம் தழைத்து.

கல்வியின் பெருமை.

(அகவற்பா)

அலகிலாக் கருணை யாண்டவன் சிருஷ்டியில்,
அலைகடல் சூழும் அம்புவி மீது,
பலபல நிறமும் பலபல திறமும்
பலபல நிதியும் பலபல மதியும்

படைத்துள ராகும் பல்வகை மாந்தர்
படிப்படி வேறு பட்டுள ரெனினும்,
ஐம்பொறி யுணர்வோ டமையா தறிவெனும்
செம்மைசே ரீசன் திவ்பாம் சத்தினை
ஆளும் உணர்வா யவரவர் உளத்தில்
ஏறவோ தாழவோ இயற்கையிற் பெறுவர்;
இந்த அறிவினுக் கிருப்பிட மாகும்
சிந்தையை மாந்தர் செவ்வழி செலுத்தி,
மாசார் தீநெறி மறந்தும் நினையா (து)
ஆசா னுரைப்ப தாய்ந்தாய்ந் தறிந்து,
ஈச்வா பக்தி இன்னருள் வாய்மை
தேசா நற்புகழ் திருந்துமா சாரம்,
இவைமுதல் நன்மைகள் எய்துதல் தானே
புவிமிசைக் கல்வியாப் புகலுவர் மேலோர்
கல்வியின் பெருமையோ கணக்கிட அரிதஅ
பல்விதம் பகரினும் பகர்தற் பாலதோ?
கல்வியே அறமாம்; கல்வியே பொருளாம்;
கல்வியே இன்பம்; கல்வியே வீடு;
கற்றோர் தாமே கண்ணுடை யவர்கள்
மற்றோர் முகத்து வாய்ந்தன புண்ணே
கலைவலார் மதிநலம் காசினி முழுதும்
கலைநிறை மதியெனக் காண்போர்க் கெல்லாம்
இன்பமும் கிளர்ச்சியும் இனிதின் அளிக்கும்.
என்பல கூறுதல்? இவ்வுல கத்தே
ஆதிநாள் முதல் அரும்புகழ் தொகுத்துப்
பூத வுடலம் போயின பின்னும்
என்றும் நிலையாய் இலங்குவோர் யாவர்
என்றே நாமின் கெண்ணு மிடத்து
வால்மீகி வியாசர் வரகம்பர் ஔவை
போல்மேவு புண்ணியப் புலவரே யன்றோ?

வேறுள ராகும் வீரரை யரசரைக்
கூறிடல் அருமதிக் குறைவே யாகும்.

பண்டை இந்தியாவிற் கல்விநிலைமை.

(நொண்டிச்சிந்து)

—:?:—

இப்படிச் சிறப்புடைய—கல்வியில்
இந்தியா மிகவும் முந்தி யிருந்த
தென்பதை உலகறியும்;—எனினும்
ஒருசில விவரம் உரை செய்தால்
உபயோகமே யாகும்—வேத
சாஸ்திரங்கள் ஈசன் தோத்திர நூல்கள்
சாத்விக குணம்விளக்கும்—அரிய
நீதிநூல்கள் பல போத நூல்கள்
நிகரில் தத்துவ நூல்கள்—இன்னும்
கற்பனை யலங்காரம் பொற்புறக் கொண்டு
கதைநயம் உயர்நீதி—முதலாம்
சொற்பொருள் நலங்கள் பற்பல சேரும்
சுவைமிகு காவிய நூல்கள்—இதி
காச புராணங்கள் மாசிலாச் சிற்பம்
கணிதம் சோதிடம் வைத்யம்—இவைபோல்
கலைபலவற்றை மலைவிளக்காக்
காட்டும் பல நூல்கள்—வேறு
நாட்டுளோர் காட்டுமிராட்டரென
நாட்டும் படியிருந்த—ஆதி
கால முதலாய் நமது சிலநாட்டில்
கனரிஷி முதலோரால்—நல்ல
குருசிஷ்ய முறையில் பரம்பரையாய்
கூறிவைத்தவை கோடி.

தற்கால நிலை.

(கும்மி மெட்டு)

இப்படிப் பற்பல வித்தை முளைத்து
இந்தியா முன்னாள் செழித்திருக்க
இடையிற் பற்பல மஹமதியர்கள்
இந்நாட்டிற் புகுந் தாண்டார்கள்;

இந்த இடையிட்ட காலத்திலே நல்ல
இந்தியக் கல்வியும் தர்மங்களும்
மதத்துவேஷத்துட னுட்கலகங்களால்
மங்குத லுற்றன கொஞ்சம் கொஞ்சம்!

இவர்க்குப் பின்வந்த ஐரோப்பியர்களில்
இங்கிலீஷ் காரர்கை யேற்றமுற்று
இந்தியாவை யிப்போ தாள்வதில் நமக்கு
எய்திடு நன்மை பலவு முண்டு.

அந்த நன்மைகளில் ஒன்றெனவே நாம்
ஆங்கிலக் கல்வியைக் கூறிடலாம்;
ஆங்கிலத்தாலே நாம் தன்மறுப் பொற்றுமை
அறிவு விசால மடைகின்றோம்.

ஆயினு மிந்தியர் முப்பத்தைந்து கோடி
ஆனவர்க ளெல்லாம் துரைத்தனத்தார்
ஆங்கில முறையிற் கல்வி பயிற்றுதல்
அசாத்தியத் தோ டனாவசியமு மாம்;

மேலுங் கவனித்துப் பார்க்கில் நமது
மேலாம் கவண் மெண்டார் எல்லார்க்கும்
பொதுவாய்ப் புத்திக் குரியதா மென்றே
புரிந்து வருவது சாத்தியமாம்
அதற்கும் ராஜாங்கத்தார் அரசிறைப்பொருளில்
அதிகம் எடுக்க முடியாது;

ஏனெனில் காவல் மராமத் சுகாதாரம்
இவை பிறவற்றுக்குப் பணம் வேண்டும்

ஆதலால் கல்வி விஷயமாக நம்
அரசாங் கத்தார் செய்வ தெல்லாம்
இந்திய ஜனத்தொகைக் கீடுநோக்கில் அது
என்றென்றும் போதாமல் தானிருக்கும்;

அன்றியும் கல்விக் கனுகூலம்பல
அரசாங் கத்தார் செய்தாலும்
ஆசாரம் பாஷை அநுஷ்டானம் மதம்
ஆன இவை வித்தியாசத்தினால்

நம்முடைய இந்தியா நாட்டுக்கிசைந்த
நல முழுவதும் நண்ணாது;
ஆகையால் இந்தியக் கல்வி சிறக்க
ஆசையோ டிந்திய கனவான்கள்

வேண்டும் பணமிகச் சேகரித்துத் தக்க
விற்பன்னர் தம்முடன் யோசித்துத்
தேசியக்கல்வி நம் தேசமெங்கும் வெகு
தேஜஸ்ஸுடனே பரவிவர

ஆனமுயற்சிகள் அறிஞர்கள் பற்பலர்
ஆழ்ந்து நினைத்துச் சொல்லும் வண்ணம்
ஆத்திரத்தோ டிந்த்ய புத்திரர் நாம் செய்யின்
அடியிற் கண்ட பலன்கள் உண்டாம்.

தேசீயக் கல்வியின் பயன்.

(ஆனந்தக்களிப்பு)

தேசீயக் கல்வியால் நாளும்—நல்ல
செல்வம் வர்த்தகத்துடன் சேர்ந்தோங்கும் நீளும்,
தொழில்கள் பலபல கொழிக்கும்—நாட்டில்
தொன்மை வளமெலாம் தோன்றிச் செழிக்கும்;

129

நாடெங்கும் அஞ்ஞானம் நீங்கும்—தூய
நல்லவரிடம் அபிமானமே ஓங்கும்.

ஒத்துழைப் பென்பது கூடும்—இப்போது
உள்ள மதத் துவேஷம் ஊரைவிட் டோடும்

கல்விக்குச் செலவு குறையும்—வேறுங்
காசுக்கா யுழைத்திடு மாசையும் மறையும்

தேசாபிமானம் சொலிக்கும்—என்றும்
சிறுமைசேர் தன்னியப் பேதம் ஒளிக்கும்

தாய்ப்பாஷைக்கு நல்ல காலம்—இந்தத்
தலமெங்கும் ஓங்குமே புண்ணிய சீலம்

சொற்ப வரவிருந்தாலும்—தோன்றும்
தூயகருத்தே உளத்திலெக் காலும்

தேசபுத்தி மிக மங்கும்—உண்மை
ராஜபக்தி மேலும் நலமுறப் பொங்கும்

ஈசுர விஸ்வாசம் இலங்கும்—எங்கும்
நேசம் பெருகவே நேர்மை துலங்கும்

இந்திய மாதாவின் கீர்த்தி—வளர
மைந்தர்கள் நாமிது செய்வதே நேர்த்தி

அருமையாம் தேசியவித்தை—இதனை
ஆதரிப்பதில் வேணும் உள்ளத்தில் சிரத்தை

இந்தநன் முயற்சிக்கே உதவி—செய்பவர்க்
கிந்துமாதேவி யருள்வள் நற்பதவி.

மங்கல வாழ்த்து.

வாழி தேசிய வித்தையே—நாட்டில்
வாழி யதனால் வளம்பல மெய்யே
வாழி நம் மிந்தியா வாழி—நாளும்
வாழி யன்னைபுகழ் வழிவழி யூழி

வாழி நம் ஜார்ஜ்மன் வாழி—மிக
வாழி யவர் செங்கோல் மென்மேலும் வாழி
வாழி சர்வேச்வரன் கருணை—என்றும்
வாழி நம் முள்ளத்தில் அவன் நாமஸ்மரணை.

(முற்றிற்று)

வே. முத்துஸாமி ஐயன்,
எம். ஏ. எல். டி.
மதுரை.

விடுகதை வினுவுக்கு விடை.

வித்யாபாநு தொகுதி-சுல் சுசம்பக்கத்தில் வெளியான
விடுகதைவினுவுக்கு விடைவருமாறு:—

I. ஐந்தெழுத் ததுசேர்ந் தோருசை யாதல்
ஔவைசொல் ஆத்திரு டியதாம்
ஐந்தெழுத் ததனிற் கடைஇரண் டகன்றால்
ஆத்தியாம் எனவுரை செய்வாம்
ஐந்தெழுத் ததனில் மத்தியின் மூன்றும்
அகன்றிடில் ஆடியாம் மாதம்
ஐந்தெழுத் ததிற்பின் னன்குமே யகன்றால்
ஆ வெனும் இரக்கச்சொல் லாமே.

சி. முத்துக்குமாரு முதலியார்,
ஒவ், பக்கோ ஜில்லா.

II. இச்செய்யுளிலே வினவிய ஐந்தெழுத்தாலாகிய சொல் "ஆத்திருடி" யென்னுஞ்சொல்லே. இச்சொல் கடைஇரண்டெழுத் தகன்றால் ஆத்தியென்றாகிச் சிவபெருமான் அணியக்கூடிய பொருள் ஆகின்றது. நடுவினுள்ள மூன்றெழுத்து மகன்றால் ஆடியென ஒரு மாதத்தின் பெயராகின்றது. பின்னுள்ள நான்கெழுத்து மகன்றால் "ஆ" வென்றாகி ஓர் இரக்கக் குறிப்புரையாகின்றது. ஆதலால் இவ்விடை வினுவுக்குப் பொருத்தமேயாகும் இங்ஙனம்,

நாவுக்கரசு.

சுலக்ஷணு.

(ககஉ-ம் பக்கத் தொடர்ச்சி.)

தீப்பொறி பறக்கிற கண்களோடும், வெளுத்த முகத்துடனும், துடிக்கிற உதடுகளோடும், நடுங்கிக் கொண்டிருக்கிற உருவத்தோடும், அவள் இவ்விதமாய்ச் சொல்லிவிட்டுத் தான் பிடித்த பிடியை விட்டு விட்டாள்.

"தங்களுடைய காமவிகாரம் அடங்கினதும் இப்பொழுது நடந்ததற்காகத் தாங்கள் வருத்தப்படுவீர்கள்." என்று சிந்தாமணி சொன்னான்.

"வருத்தப்படுவேனு? ஒருக்காலுமில்லை. சுலக்ஷணு ஒருபோதும் வருத்தப்படமாட்டாள். வருத்தப்படுவதற்குப் பதிலாக அவள் பழிவாங்க யோசிப்பாள். நீ ஒருவிதமான தீர்மானத்திற்கு வந்துவிட்டால் நானும் ஒருவிதமாய்த் தீர்மானித்துவிட்டேன். உன்னுடைய காதலை அநுபவிப்பதற்காக எனக்கு உற்றது உரியது எல்லாவற்றையும், அவசியமானுல், சந்தோஷத்துடன் இழந்திருப்பேன். ஆனுல் இவ்விதமாக என் காதல் மறுக்கப்படுதலாகிய தாழ்மையை என்னுற் சகிக்கமுடியாது. ஆகையால் உன்னை எவ்வளவுக்கெவ்வளவு பிரியமாய் நேசிக்கிறேனே அவ்வளவுக்கவ்வளவு கொடுமையாய் விரோதிக்கத் தயாராயிருக்கிறேன். உனக்கு என் காதல் வேண்டுமா? அல்லது என் பகை வேண்டுமா?" என்று சுலக்ஷணு கோபத்தோடு கம்பீரமாய்நின்றுகொண்டு சொன்னுள்.

சிந்தாமணி, "அம்மா, இவ்விதமான சம்பாஷணை அதிகநேரமாய் நடக்கிறது. ஆகையால் இது நின்றுவிடவேண்டும்."

"அப்படியானுல் இவ்விடத்தைவிட்டுப்போ. நான் உன்னைப் பகைக்கிறேன். பழிவாங்குவேன்," என்று சுலக்ஷணு மிகவும் உக்கிரமாய்ச் சொன்னுள்.

சிந்தாமணி சுலக்ஷணாவின் வீட்டைவிட்டுச் சென்றான். அவன் மனதிற் பற்பல யோசனைகள் தோன்றின. அவன் அம்புஜத்தின் கற்போடுகூடிய காதலையும், சுலக்ஷணாவின் காமவெறிபிடித்த நேசத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான். கனக்கண்டு விழித்ததுபோல், அவனுக்குத் தோன்றிற்று. இவ்விதமாக அவன் வீடு நோக்கி நடந்தான். வழியில் ஒரு வீட்டில் வீணை முதலிய வாத்தியங்களின் ஒலியும், பாட்டுப்பாடும் சப்தமும் கேட்டது. அவன் அண்ணாந்து பார்த்தான். மேல்வீட்டு ஜன்னலில் அம்புஜத்தின் முகம் தெரிந்தது. அவள் சிந்தாமணியைக் கண்டதும் தன்னுடைய கைக்குட்டை (Handkerchief) யை எடுத்து மெதுவாய் வீசினாள். சிந்தாமணி மிகவும் சந்தோஷத்தோடு அதைப் பார்த்துவிட்டு மெதுவாய் அப்புறம் சென்றான். அவனுக்கு அப்பொழுது சுலக்ஷணாவின் பயங்கரமான வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன. அவள் அவனாற் காதலிக்கப்பட்டவளுக்குத் தீங்கு செய்வதாய்ப் பயமுறுத்தினதனால், அம்புஜத்தினிடம் தனக்கும் சுலக்ஷணாவிற்கும் நடந்த காரியங்களை வெளியிட்டு அவளை உஷாராயிருக்கச் சொல்லலாமென்று நினைத்தான். ஆனால் அம்புஜத்தின் பரிசுத்தமான மனம் சுலக்ஷணாவின் நடத்தையை அறிந்தால் மிகவும் வருத்தத்தை அடையும் என்று எண்ணி, சுலக்ஷணாவின் விஷயத்தை ஒருவருக்கும் வெளியிடுவதில்லை என்று தீர்மானித்துக்கொண்டான்.

பொய்ப் பிரஸ்தாபம்.

சிந்தாமணி தன் விருப்பத்திற்கு இணங்காததனால் சுலக்ஷணாவிற்கு உண்டான கோபம் அளவு கடந்ததாயிருந்தது. அவள் வெகு காலமாய்ச் சிந்தாமணியை நேசித்துவந்தாளென்பதை நாம் வாசகர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். அநேக மாதங்களுக்குமுன் சிந்தாமணி புவனாலயம் ஜமீந்தார் புத்திரிகளுக்குச் சித்திரமெழுதக் கற்பிக்க வந்த முதல்நாள் முதற்கொண்டே அவனைச் சுலக்ஷணா காதலிக்க ஆரம்பித்தாள். முதலில் இந்தக் காதலை அடக்கிவிட அவள் முயன்றாள். ஆனால் முடியவில்லை. அவளுக்குத் தெரியாமல் அக்காதல் வளர்ந்து முற்றிவிட்டது.

தான் சிந்தாமணியைத்தவிர வேறொருவரையும் காதலித்த தில்லை என்று அவள் சொன்னது முழுதும் உண்மை. அவளுடைய காலஞ்சென்ற கணவனாகிய மானவனை அவள் காதலினாற் கலியாணம் செய்துகொள்ளவில்லை என்பது வாசகர்களுக்குத் தெரியும். அவருடைய அந்தஸ்திற்கும் ஆஸ்திக்கும் ஆசைப்பட்டு, அவருடைய பெரியவயதைக்கூடப்பாராமல் அவரை மணந்தாள். அவர் இறந்த பிறகு சுலக்ஷணை அழகும் ஆஸ்தியும் உள்ள ஓ ரிளம்விதவையா யிருந்தாள். அனேகர் அவளை மறுவிவாகம் செய்துகொள்வதாகச் சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்களில் ஒருவரும் அவளைவிட ஆஸ்தியினும் அந்தஸ்திலும் உயர்ந்தவர்களாயில்லை. ஆதலினால் அவர் களையெல்லாம் அவள் மறுத்துவிட்டாள். காதலைப்பற்றிச் சொன்னாலோ, அவளாற் காதலிக்கப்படத்தகுந்தவர்கள் ஒருவராவது இருப்பதாக அவளுக்குத் தோன்றவில்லை. இவ்விதமாக அவள் மறு விவாகம் செய்துகொள்ளாமல் தனியே இருந்து, ஒரே ஒருகாரியத் தைமாத்திரம் மனதில்வைத்துக்கொண்டிருந்தாள். புவனாலயம் ஜமீ னுக்கு மானவனிட மிருந்து நேரான வாரிசை உண்டுபண்ணினதற் கும், காலியாய்த்திரிந்த துஷிதனுக்கு ஜமீன் சேராதபடிசெய்ததற் கும் காரணம் தான்தானென்று அவள் எண்ணினாள். மதிமானை வளர்த்து ஜமீனை அவனடையும்படி செய்யவேண்டுமென்பதுதான் அவளுடைய ஆசை. அவன் வளர வளர அவனோடுகூட வளர்ந்து வந்த துர்க்குணத்தையும் கெட்ட நடத்தையையும் பார்த்தபொழுது அவளுக்குண்டான வருத்தத்தை நாம் இங்குச் சொல்லவேண்டிய தில்லை. ஜமீன் குடும்பத்தை நிலைநிறுத்தவேண்டுமென்பதுதான் அவளுடைய முக்கியமானநோக்கம். இதற்காக மதிமானுக்குக் கல் யாணம் செய்விக்க முயன்று, அம்புஜத்தை அவனுக்கு மனைவியாக்க நிச்சயித்தாள். பெண் நல்லகுடும்பத்திற் பிறந்தவளா யிருக்கவேண் டும். ஏழையாயு மிருக்கவேண்டும். சொத்திருந்தால் துர்க்குணமும் துர்நடத்தையும், கெட்ட சகவாசமுமுள்ள மதிமானுக்கு அப்பெண் ணைக் கொடுக்கமாட்டார்கள். அம்புஜம் உயர்ந்தகுடும்பத்திற் பிறந்த வளும் சொத்தில்லாதவளுமாயிருந்தாள். ஆதலாற்றான் அவளை நிச்

சயித்தது. மதிமானுக்குக் கல்யாணம் நடந்து, புவனலயம் ஜமீனுக்கு வாரிசாக ஆண்குழந்தைபிறப்பதைத் தான் கண்ணுற்பார்க்கவேண்டு மென்ற ஆவல் சுலக்ஷணைவிற்கு அதிகமாயிருந்தது.

நல்ல உலகானுபவத்துடனும் இப்படிப்பட்ட எண்ணங்களுடனும் இருந்த அவள் காதலுக்கு வசப்படுவது அவ்வளவு எளிதல்ல. தன்னுடைய கற்பைக் காத்துக்கொள்வதற்குவேண்டிய பெருமையும் அவளிடமிருந்தது. அவள் இவ்வளவு காலமாய்க் கற்போடு இருந்தது, அவளுக்குக் கற்பின் மகிமையில் உள்ள பிரீதியினலல்ல. ஆனல் தான் கற்பை இழந்து, அவ்விஷயம் வெளிக்குவந்துவிட்டால் தன்னுடைய நல்லபெயர் போய் அவமானம் நேரிடுமென்ற பயத்தினுற்றான் அவள் கற்போடிருந்தாள். இதுதான் அவள் கணவன் இறந்ததுமுதற் சிந்தாமணியைச் சந்தித்தவரையுமுள்ள அவளுடைய சரித்திரம்.

பத்தொன்பதுவருஷங்கள் அவள் காதலில் ஈடுபடாமல் இருந்தாள். சிந்தாமணியின்மேல் உண்டான ஆசையை அடக்குவதற்கு அனேக முயற்சிகள் செய்தாள். அவன் பாடம் கற்பிக்க வரும்பொழுது அவனைப் பார்க்காமலிருக்க முயன்றாள். என்னசெய்தும் பிரயோஜனப்படவில்லை. அவள் தன்மனத்தில் உண்டான ஆசையை அடக்கமுயன்றதானது, ஒரு பெரிய ஆற்றின் ஜலத்தைச் சமுத்திரத்தில்விழாதபடி செய்வதற்காக ஒரு கையைக்கொண்டு தடுப்பது போலிருந்தது. பிறகு அவள் சிந்தாமணி தன் காதலை மறுப்பானென்று கனவிலும் நினைக்கவில்லை. உலகத்திலுள்ள ஜனங்களிற் பெரும்பாலாருடைய நிலைமை அவளுக்குத் தெரியும்.

சிந்தாமணி தன் காதலை மறுத்ததற்குக் காரணம் 'அது பாவம்' என்று அவன் நினைத்ததனுலும் அவனுடைய இயற்கையான நற்குணத்தினுலும் என்று அவள் நம்பவில்லை. அவன் வேறொருத்தியைக் காதலித்ததனுற்றான் 'வலியவந்தசீதேவியைக் காலாலுதைத்துத் தள்ளினது போல்' தன் வேண்டுகோளுக்கு இணங்கவில்லை என்று நம்பினுள். ஆகையால் அவனுற் காதலிக்கப்பட்டவள் எவளாயிருந்தாலும், அவள் தனக்கு விரோதி என்று எண்ணிக்கொண்டாள்.

தாங்கள் எப்படியிருக்கிறார்களோ அப்படியே பிறரையும் நினைப்பது மனுஷ்ய சுபாவம். சுலக்ஷணா சிந்தாமணிக்குத் தன்னாற் கூடுமான தீங்குசெய்யத் தயாராயிருந்தபடியால், அவள் அவனைக் காதலித்ததையும் அதற்கு அவன் உடன்படாததையும் பிறரிடம் சொல்லிவிடுவான் என்று நினைத்தாள். ஒரு வேளை இப்பொழுது சொல்லாவிட்டாலும் தான் பயமுறுத்தியபடி அவனுக்குத் தீங்குசெய்யஆரம்பிக்கும்பொழுது அவன் கட்டாயம் அவளுடைய விஷயத்தை ஊராரறியச் செய்வான் என்று நிச்சயமாய் நம்பினாள். ஆகையால் தானே முந்திக்கொண்டு, சிந்தாமணி தன்னைக் காதலிப்பதாகச் சொன்னதாகவும், தான் மறுத்ததாகவும் உடனே எங்கும் பிரஸ்தாபம்செய்வதென்று அவள் தீர்மானித்துக்கொண்டாள். இவ்விதமான பிரஸ்தாபத்தால், சிந்தாமணி சொல்லப்போவது உலகத்தாரால் நம்பப்படாமலிருப்பதோடுகூட அவனுடைய நல்லபெயரும் கெட்டுப்போகும். அதனால் அவனுக்கு ஜீவனத்திற்குவழியில்லாமற்போய்விடும். ஒருவரும் தங்களுடையபுத்திரிகளுக்கு இவ்விதமான கெட்டபெயருடையவனை உபாத்தியாயனாக நியமிக்கமாட்டார்கள். வெளியேபோயிருந்த தன் புத்திரிகள் வந்ததும், முதலில் அவர்களிடத்தில் தான் தீர்மானித்தபடி பிரஸ்தாபம்செய்வதென்று எண்ணினாள்.

சற்றுநேரம் கழித்து அவளுடைய புத்திரிகள் வந்தார்கள். சுலக்ஷணா அவர்களைப்பார்த்துச் சொல்லுகிறாள், "என் அன்பான குமாரத்திகளே! நீங்கள் இல்லாத சமயத்தில் இங்கே என்ன நடந்ததென்று ஒருக்காலும் யோசித்துச் சொல்லமுடியாது."

"என் பிரியமான அம்மா! எப்படியிருந்தாலும் அது முக்கியமானகாரியமாயிராது என்பது தாங்கள் சொல்லும் மாதிரியிலிருந்து தெரிகிறது," என்று அசிதா சொன்னாள்.

"என்னை ஒருவன் காதலிப்பதாகவும் கல்யாணம் செய்துகொள்வதாகவும்சொன்னால் நீங்கள் என்ன நினைப்பீர்கள்?" என்று சுலக்ஷணா சொன்னாள்.

"என்ன! உங்களையா அம்மா! யாராவது ஒரு கிழட்டு ஜமீந்தார் அவ்விதம் சொல்லியிருக்கலாம்," என்றாள் விமலா.

"நீ சொல்வது மரியாதையாயில்லை. கிழவர்களைத் தவிரப் பாலியர்களாற் காதலிக்கப்படுவதற்கு நான் தகுந்தவளில்லையா?" என்று சுலக்ஷணை கம்பீரமாய்ச் சொன்னாள்.

விமலா, "நல்லது, நடந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லுங்கள்."

அசிதா, "ஆம், நடந்ததைச் சொல்லுங்கள்."

"நான்சொன்னது முழுவதும் உண்மைதான். என்னைக் காதலிப்பதாகச்சொன்னது யார் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்தால், விமலா சொன்ன கிழட்டுஜமீந்தாரைவிட அவன் தாழ்ந்தவன் என்று நீங்கள் அறிந்துகொள்வீர்கள்," என்று சுலக்ஷணை அசிதாவைப் பார்த்துச் சொன்னாள்.

அசிதா, "அப்படியானால் அது யார்?"

சுலக்ஷணை, "உங்களுக்குச் சித்திரமெழுதக் கற்பிப்பவனாகிய சிந்தாமணி."

இதைக் கேட்டதும் விமலாவும் அசிதாவும் உண்மையான ஆச்சர்யத்தை அடைந்தார்கள்.

சுலக்ஷணை மறுபடியும் சொல்லத்தொடங்கினாள், "அது உண்மைதான். இன்று மத்தியானம் அவனுக்காக நீங்கள் கொஞ்சநேரம் காத்துக்கொண்டிருந்தீர்கள் என்பது உங்களுக்கே தெரியும். அவன் வராததனால் நீங்கள் வெளியேபோனீர்கள். அவன் வந்தால் நாளை வரும்படி சொல்லச்சொன்னீர்கள். நான் எப்பொழுதும் அவனை யோக்கியதை உள்ள மனிதனென்று எண்ணியிருந்தேன். நீங்கள் அவனிடம் சொல்லச் சொல்லியிருந்த சமாசாரத்தை வேலைக்காரர்கள்மூலமாய்த் தெரிவிப்பது அவனுக்கு மரியாதைக் குறைவு என்று நினைத்தேன். ஆகையால் அவன் இந்தவீட்டிற்கு வந்தபொழுது, அவனை என்னிடம் அழைத்துவரச்சொல்லி வேலைக்காரர்களுக்குக் கட்டளை யிட்டிருந்தேன். அப்படியே அவர்கள் அவனை என்னிடம் இட்டுக்கொண்டுவந்தார்கள். அவன் நேரஞ்சென்றுவந்ததற்குக் காரணம்சொன்னபிறகு, நான் அவனை நாளைவரும்படி சொன்

னேன். அவன் உட்கார்ந்துகொண்டு என்னிடம் சம்பாஷணைசெய்ய ஆரம்பித்துத் திடீரென்று என்னைக் காதலிப்பதாகச் சொன்னான். எனக்கு உண்டாகிய ஆச்சர்யத்தினால் அவனைத் தடைப்படுத்தாமல் விட்டுவிட்டேன். அவன் எவ்விதமாய் ஆரம்பித்தான் என்பது என க்கு ஞாபகமில்லை. என் காலில் விழுந்தான். நாவல்களிலும் கட் டுக்கதைகளிலும் காதலர்கள் பேசுவதாக எழுதப்பட்டிருக்கும் வார்த் தைகளை அபரிமிதமாய் அவன் என்னிடம் பேசினான். அவன் தன் மேல் இரக்கம்கொள்ளும்படி கெஞ்சினான். நான் அவனிடத்திற் கிரு பைபாலிக்காவிட்டால் இறந்துவிடுவதாக உறுதி கூறினான்."

"இது நடக்கத் தக்க காரியமா?" என்று விமலா தன் தாயைக் கொஞ்சம் சந்தேகத்தோடு நோக்கிக்கொண்டு சொன்னாள்.

"அவனுக்கு எவ்வளவு துணிகரம்!" என்று அசிதா சொன் னாள். அவள் தன் சகோதரியைப்போலல்லாமல் தாய்சொன்னது முழுவதையும் நம்பினாள்.

"துணிகரந்தான். ஆனால் அதற்குக்காரணம் அவனுடைய அறி வின்மை என்று நினைத்தேன். ஆயினும் அவனை இனிமேல் ஒரு போதும் இந்த வீட்டில் அடியெடுத்துவைக்கக்கூடாதென்று கட் டளையிட்டேன்," என்று சுலக்ஷணை விமலாவின் சந்தேகமானபார் வையைக் கவனியாதவள்போலச் சொன்னாள்.

அசிதா, "சிந்தாமணியின் நடத்தை எனக்கு மிகவும் ஆச்சர்யத் தைக் கொடுக்கிறது. நாம் எப்பொழுதும் அவனை மிகவும் யோக்கி யதை உள்ளவனென்றும்—"

"இந்தக்காரியத்தைச் செய்யத்தகாதவன் என்றும் எண்ணியிருந் தோம். இந்த அவனுடையகாரியம் நம்பத்தக்கதாயில்லை. ஒருவேளை அவனுக்குப் பைத்தியம்பிடித்திருக்கவேண்டும்," என்று விமலா சொன்னாள்.

சுலக்ஷணை, "இருக்கலாம் அவனுக்குப் பைத்தியம்பிடித்தி ருக்கலாம்."

இந்த விஷயத்தைப்பற்றி இன்னும் சற்றுநேரம் சுலக்ஷணை தன் புத்திரிகளுடன் பேசிக்கொண்டிருந்து விட்டு, தன்னறைக்குப் போனுள். அவளுக்குத் தன் மூத்தமகள் விமலா தான்சொன்னதை நம்பவில்லை என்று விளங்கிற்று. ஆகையால் அது அவளுக்கு வருத்தத்தை உண்டு பண்ணிற்று.

சுலக்ஷணை அவர்களைவிட்டுச்சென்றதும், "அசிதா! நடக்கு இப்பொழுது சொல்லப்பட்ட கதையைப்பற்றி நீ என்ன நினைக்கிருய்?" என்று விமலா கேட்டாள்.

"சிந்தாமணியின் நடத்தை மிகவும் அசாதாரணமானதென்று நினைக்கிறேன்," என்ருள் அசிதா.

விமலா, "ஆம், நம்முடைய தாய்சொன்னபடி எல்லாம் நடந்திருந்தால் நீ நினைப்பது சரிதான்."

அசிதா, "இப்படிச் சொல்வதில் உன் கருத்தென்ன?"

விமலா, "நம்முடைய தாய் சில விஷயங்களை நமக்குச் சொல்லாமல் மறைத்துவிட்டாளென்று நினைக்கிறேன். சிந்தாமணியைப் போன்றவாலிபன் நம்முடைய தாயையொத்தவயதுடைய ஒரு ஸ்திரீயை இவ்வளவு சிரத்தையோடுகாதலிப்பதென்ருல் அது நம்பத்தக்கதா?"

அசிதா, "வயது அதிகமாக ஆகிவிடவில்லை. சரியாய் நாற்பதுதான் ஆகிறது. தாயார் மிகவும் அழகாயிருக்கிருர்களென்பதை நீயும் ஒத்துக்கொள்ளுவாய்."

விமலா, "நீசொல்வதுசரி. நமது தாயாருக்கு வயது நாற்பதானுல் சிந்தாமணிக்கு இருபதுதான் ஆகிறது. தன்னைப்போல் இரண்டு மடங்கு வயதுடையவளும், தனக்குத் தாயா யிருக்கத்தக்கவளுமான ஒரு ஸ்திரீயை ஒருவன் தலைகால் தெரியாமல் நேசிப்பது கூடாதகாரியம் என்று நான் மறுபடியும் சொல்லுகிறேன். நமது தாயைக் கல்யாணம் செய்துகொள்ளுகிறேன் என்று சொல்வதற்கு அவ்விதமான காதல் இருந்திருக்கவேண்டியது அத்தியாவசியம். ஒரு வார்த்தையில் நான் இந்தக் கட்டுக்கதையை நம்பவில்லை. சீக்கிரத்தில் இவ் விஷயத்தைப்பற்றி நமக்கு அதிகமாய்த் தெரியவரும்."

(தொடரும்.)

வ. வி. நடேசன்செட்டி,
ஆத்தங்குடி.

ஸ்ரீ:

வஞ்சிமாநகராராய்ச்சி.

வித்யாபாநுவின் (தொகுதி-௰-பகுதி-௯ல்) ௯௪-ஆம்பக்கத்

தொடர்ச்சி.

இனி இரண்டாவதுசான்றன "குடகோங்கிலணைந்து" * என்ற பெரியபுராணவாக்கியத்தையும் விசாரிப்போம்.

இதிலுள்ள குடகொங்கென்னும் தொடர்மொழிக்கும் அல்வழியிற் பொருள்சொல்லற் கிடமில்லாமையால் வேற்றுமைவழியாகவே பொருள் சொல்லவேண்டுமென்பது உபயகக்ஷியார்க்கும் ஒப்ப முடிந்ததே.

ஆனால் வாதககக்ஷியார் கொங்கு குடபுலத்துள்ளது என நாட்டவேண்டியவராதலால் அவர் குடபுலத்துள்ளகொங்கு என்றே பொருள்சொல்லுவார். இதிலுள்ள குடசத்தத்துக்கு, முக்கியார்த்தமாகிய திசைப்பொருள்கொள்ளப் பொருத்தமிருக்குமிடத்திற் குடபுலம் என்று லக்ஷ்யார்த்தம் சொல்வது தவறாகுமென முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது.

ஆதலால், முக்கியார்த்தமாகிய குடதிசையானது கொங்குநாட்டில் எங்குமில்லையென்று வாதககக்ஷியார் நிரூபித்துவிடுவாரானல், இங்கு, குடசத்தத்துக்குக் குடபுலம் என்னும் லக்ஷ்யார்த்தமே கொள்ளவேண்டுமென்பதில் யாதொரு தடையுமில்லை.

அப்படி நிரூபிக்குமளவும் "வடகொங்கு" என்பதற்கு, வடபுலத்துள்ள கொங்கென்று பொருள்கொள்ளாது, கொங்கின் வடபகுதியென்றே உபயகக்ஷியிலும் பொருள் சொல்வதுபோல, குடகொங்கு என்பதற்கும், கொங்கின் குடபகுதியென்றே பொருள்

---

* வஞ்சிமாநகர்-பக்கம் 6.

சொல்லல் அமைவுடையதாயிருக்கிறது. ஆதலால் "குடகொங்கிலணைந்து' என்ற பெரிய புராணவாக்கியத்துக்கு மேல்கொங்குநாட்டையடைந்து என்றே பொருள்கூறவேண்டும். அடையப்படுமிடமும் சரித்திரத்திலதுவேயாயிருத்தலால், ஆசிரியர்கருத்தும் அதுவேயாமென்பதி லையமின்றாயிற்று. ஆகையா லிதுவும் வாதகக்ஷிக்குச் சாதகமில்லதாயிற்று.

இனி வில்லிபுத்தூரார் "குடகோங்'' கென்ற மூன்றாவதுசான்றினையும் விசாரிப்பாம்.

பாண்டவ ரிராசசூயஞ்செய்யும்பொருட்டுத் திக்குவிசயஞ்செய்துபோந்தசேனைத்தலைவர் சென்று தமிழ்நாட்டு வேந்தரிடத் திறைகொண்ட செய்தி கூறியவிடத்து, "சென்னிநாடுகுடகோங்குநாடு திறைகொண்டுதென்னனுறைசெந்தமிழ்க், கன்னிநாடுறவுடன் புகுந்துமணிநித்திலக் குவைகள்கைக்கொளா'' § என்று சொல்லியிருக்கிறார். இங்கு, குடகொங்குநாடு என்பதற்குக் குடபுலமாகிய கொங்குநாடென இருபெயரொட்டுப் பண்புத்தொகைப்பொருளுரைப்ப திசையாதென்று முன்னமே சொல்லப்பட்டது. அதனையொழித்து, குடபுலத்துள்ள கொங்குநாடென்று பொருள் சொல்வதானால், அது குடபுலத்தின் ஏகதேசமாகிய கொங்குநாட்டில்மட்டும் திறைகொண்டுளென்ற பொருள்பட்டு, குடபுலமாகிய சேரமண்டலத்தில், திறைகொள்ளவில்லையென்பதையும் குறிப்பாலுணர்த்திப் புகழ்பொருளுக்கு இழுக்குண்டாக்குவதல்லது வேறு பயனில்லாமையால் அது பொருந்தாதெனவறிக.

மற்றென்னைபொருளுணர்த்துமெனின், "தென்னுடன்குடகோங்கன் சோழன்'' என்ற ஆழ்வார்திவ்யசூக்தியுட்போலவே இங்கும் குடகொங்கு என்பதற்கு, குடபுலமும், கொங்கும் என்னும் பொருளில், குடகொங்கு என உம்மைத்தொகைநிலைத்தொடராய், அந்நாடென்பதுடன்கூடி, "குணகுடகடல்'' * என்பதுபோல, குட-

---

§ வஞ்சிமாநகர்-பக்கம் 118.

* புறம் செய்-17.

கொங்குநாடென இருபெயரொட்டுப் பண்புத்தொகையாய் முன் மொழியிரண்டும் நாடென்பதுடன் தனித்தனியியைந்து குடநாடு கொங்குநாடு எனப்பிரிவுபட்டு அவ்விரண்டுநாட்டையும் வெவ்வேறு புணர்த்துமென்க. இதற்குப்பிரமாணம் " த்வந்த்வாந்தேஸ்ரூயமாணம் பதம் ப்ரத்யேகமபிசம்பத்யதே." ‡ என்பது. அதாவது, உம்மைத்தொகை யடுத்தமொழி பிரிந்து ஒவ்வோரடையொடு மியைந்து பொருள்படும். என்றபடி. இங்ஙனம் பொருள்கொள்ளுதலே புகழ்பொருளைச் சிறப்பிக்கு மாசிரியர்கருத்துக்கு மொத்ததாமாதலால், இதுவும் வாதககக்ஷிக்குப் பாதகமாய் எதிர்வாதககக்ஷிக்கே சாதகமாயிருக்கிறது.

ஆதலாற் கவிகாவியப் பிரயோகங்களிலிருக்கிற குடகொங்கு என்ற சொற்றொடரைக்கொண்டு கொங்குமண்டலம் குடபுலமாகிய சேரமண்டலத்துள்ளதென்று சாதிப்பதானது, "தென்றிருவரங்கம்" † என்ற திவ்யசூக்தியைக்கொண்டு திருவரங்கமென்னுந் திருப்பதியானது தென்புலமாகிய பாண்டியமண்டலத்துள்ளதெனத் துணிவதுபோலும் அசதனுமானமாய் அப்பிரமாணமாமென வறிக.

இனிக் கொங்கரைக் 'குடகக்கோங்கர்' ¶ எனச் சிலப்பதிகாரங் கூறியதாகக்காட்டிய நான்காவது சான்றினையும் விசாரிப்போம்.

குடகக்கொங்கு என்பது குடகம், கொங்கு என்னும் இரண்டு மொழிகளாலாகிய ஒரு தொடர்மொழியாயிருக்கிறது. அவற்றுள் நிலைமொழியாகிய குடகம் என்னும் சொல்லுக்குப் பொருள்யாதெனின், குடதிசைக்கண்ணுள்ளது என்பது பொருளாம். இங்குக் குடதிசை யென்பதற்கு இன்ன இடத்திலிருந்து என்னும் புறப்பாட்

---

‡ இது வ்யாகரணத்தில்,,ஸுப்திஙந்தம்பதம்" என்ற ஸூத்ர வ்யாக்யானத்துள்ளது.

† திருவாய்மொழி ஏழாம்பத்துள், இரண்டாந்திருவாய்மொழி ஒன்பதாம்பாசுரம்.

¶ வஞ்சிமாநகர்-பக்கம் 8.

டெல்லை பெறப்படாமையாலும், அத்திசைப்பொருட்பெயரடுத்த கொங்கு என்னும் சொற்பொருள் புலப்பட்டுநிற்றலாலும், புலப்பட்டதனை யொழித்துப் பிறிதோரெல்லைதேட நியாயமில்லாமையாலும், அக்கொங்கினுள் என்னும் அகப்பாட்டெல்லை குறிப்பாற்கொள்ளக்கிடக்கிறது. இதனுற் கொங்கினுட் குடக்குள்ளது 'குடகக் கொங்கு', அதனையுடையார் குடகக்கொங்கர் என்றே பொருள்கொள்ளவேண்டும்.

இவ்வாறன்றிக் குடகக் கொங்கர் என்பதற்குக் குடபுலமாகிய கொங்குநாட்டுள்ளவரென்றாயினும் குடபுலத்துள்ள கொங்குநாட்டுள்ளவர் என்றாயினும் பொருள்கூறுவது பொருந்ாதென்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும். அப்பொருள் கொள்ளுதலிற் கொங்கர் என்ற துணையே பொருளுணர்த்திக் குடகம் என்னும் அடைமொழி வாதகக்ஷியிற் பயனற்றதாய்விடுகிறது. எதிர்வாதகக்ஷிக்கு அது குணகக்கொங்கரை விலக்கிப் பயனுடையதாகிறது. பயனில்லதும், பயனுடையதுமாகிய இரண்டனுட் பயனுடையதேசிறந்ததாமாதலால் அவ்வடைமொழி வாதகக்ஷிக்குச் சாதகமாகாது எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயிருக்கிறது.

அன்றியும், " குடகக்கொங்கரும், மாளவவேந்தனும், கடல்சூழிலங்கைக்கயவாகுவேந்தனும்" என உடனெண்ணப்பட்ட இருவரும் குடபுலத்தின்வேறான பிறமண்டலத்தரசராயிருப்பதுபோல, குடகக் கொங்கரும் குடபுலத்தின்வேறான கொங்குமண்டலத்தரசராயிருக்க வேண்டுமென்பது சாகசரியநியாயத்தாற் சித்தித்திருக்கிறது. ஆதலாற் குடகக்கொங்கரென்ற சிலப்பதிகாரப் பிரயோகமான நான்காவதுசான்றும் வாதகக்ஷிக்குப் பாதகமாயும் எதிர்வாதகக்ஷிக்கே சாதகமாயும் குடபுலத்துட்கொங்குநாடில்லையென்று வெளிபடுகிறது.

இனி ஐந்தாவது சான்றாக, கொங்குநாட்டுப் பேரூரைக் குடசிதம்பரம் என்று பேரூர்ப்புராணம் கூறியிருப்பதையும் விசாரிப்போம்.

கொங்குநாட்டுப் பேரூர்க்குக் குடசிதம்பரம் என்ற பெயரிருப்பதால், அப்பெயர்க்குக் குடபுலத்துள்ள சிதம்பரம் என்று பொருள்கொண்டு, அப்பேரூருள்ளகொங்குநாடுகுடபுலமாகிய சேரமண்டலமாகுமென்று சாதிக்கவேண்டி, தில்லைச் சிதம்பரத்தைக் குணசிதம்பரம் என்றதற்கும் குணபுலமாகிய சோழமண்டலத்துள்ள சிதம்பரம் என்ற பொருளுடையதென்று அதனைத் திருஷ்டாந்தமாகக் காட்டுகிறார். * இச்சிதம்பரங்களுக் கடைமொழிகளான குட, குணசத்தங்களுக்கு, முறையே முக்கியார்த்தங்களான மேற்கு கிழக்கு, என்னும் திசைப்பொருள்கொள்ளப் பொருத்தமில்லாதிருந்தாலல்லது, அவற்றிற்கு முறையே குடபுலம் குணபுலமென்னும் லக்ஷ்யார்த்தங் கொள்ளத்தகாதென்பது முன்னமே முடிவுபெற்றிருக்கிறது.

இங்குக் காட்டப்பட்ட சிதம்பரமிரண்டனுள் இடைநின்று நோக்குவார்க்கு ஒன்று கிழக்கிலும், மற்றொன்று மேற்கிலுமிருப்பதுபற்றி, அவை முறையே குணசிதம்பரம், குடசிதம்பரம் என்று திசைப்பெயரடையால் விசேடிக்கப்பட்டிருப்பதால் அவற்றிற்கு அடைவே கீழைச் சிதம்பரம் மேலைச் சிதம்பரம் என்று செம்பொருள்கொள்வதே பொருத்தமாயிருக்கவும், இதனைத் தெரிந்துகொண்டே குடசிதம்பரம் என்பதற்குக் குடபுலத்துள்ள சிதம்பரம் என வலிந்துபொருள்கொண்டு, அவ்வூரிருக்கும் கொங்குநாடு குடபுலமாகுமென்று சாதிப்பதானது, தென்னாற்காடு என்னும் பெயர், திசைப்பெயரடையால் விசேடிக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டே அவ்வடைமொழிக்குத் 'தென்புலம் என வலிந்து பொருள்கொண்டே, தென்னாற்காடானது தென்புலமாகிய பாண்டிநாட்டிலுள்ளது; தென்காசிபோல, எனச் சாதிப்பது போலும் அநுமானுபாசமாய் அப்பிரமாணமாமெனவறிக. ஆதலாற் குடசிதம்பரமென்ற பேரூர்ப்புராணப் பிரயோகமும் வாதகக்ஷிக்குச் சிறிதும் சாதகமாகாதிருக்கிறது.

---

* வஞ்சிமாநகர்-பத்தம் 8.

இனி ஆறாவதுசான்றாக, "சென்ற சென்ற குடபுலத்து" † எனச் சேக்கிழார்வாக்கினுற் கொங்குநாடு குடபுலமென்று விளங்கமாகச் சொல்லப்பட்டிருப்பதாய் வாதககூறிபார் ஆதாவுகாட்டக்கூடும்; அதனையும் விசாரிப்போம்.

குடபுலம் என்றசொல் சேரமண்டலத்தையே யுணர்த்தவேண்டுமென்னும் நியமமின்றி, ஒரு குறித்த இடத்தினின்றும் மேற்றிசையிலுள்ள நிலத்தையுணர்த்தும் சாதாரணதிசையடுத்தபெயராயும் வழங்கப்படுவதாகும்.

இதனைக் 'கடல்சேர்கானற் குடபுலம்'* என்ற பதிற்றுப்பத்தினுரையை மேற்கோள்காட்டி, வஞ்சிமாநகருடையாரே நிரூபித்திருக்கிறார். ஆதலால், குடபுலம் என்ற சொல்லுக்குச் சேரமண்டலமேயன்றி, ஒரு குறித்த இடத்திலிருந்து மேற்றிசையிலுள்ள பூமியும் பொருளாமென்பதில் வாதககூறிபாருக் காக்ஷேபமில்லையென்பது வெளியாயிற்று. இவ்விருவகைப் பொருள்களுள், "சென்ற சென்ற குடபுலத்துச் சிவனடியார் பதிகடோறும்" என்றபெரியபுராணத்துட்கண்ட குடபுலம் என்றசொல்லுக்குப் பொருள்யாதாயிருக்குமென வாராய்வாம்.

வஞ்சிமாநகருடையார்கருத்துப்படி சேரமண்டலம் என்று பொருள்கொள்வதாயிருந்தால் அக் குடபுலமாகிய சேரமண்டலம் "சென்ற சென்ற" என்ற அடுக்குக்கிணையப் பலவாயிருக்கவேண்டும். அது பலவாகாமையாற் பொருந்தாதிருக்கிறது. ஆதலால் அவர் அப்பொருளைப் பொருத்தமுடையதாக்கவேண்டி, "குடபுலத்துச் சென்ற சென்ற சிவனடியார் பதிகடோறும்" என மாற்றிக்கூட்டி, குடபுலத்துப் பதிகள் எனத் தூராந்வயமாக்கிப் பொருளுரைக்க வேண்டும். ஆற்றொழுக்கானபொருள் கிட்டாவிட்டால்மட்டும் மாற்றிக்கூட்டலும், தூராந்வயமும் கொள்ளத்தகுமாதலால், ஆற்றொழுக்காகப் பொருள்கொள்ளத் தகுமிடத்து அவை கொள்ளத்தகாவெனவறிக.

† வஞ்சிமாநகர்-பக்கம் 20.
* வஞ்சிமாநகர்-பக்கம் 69,

"சென்றசென்ற குடபுலத்துச் சிவனடியார் பதிதொறும்" என்பதற்கு, (சோணாடுகடந்து மலைநாடுநோக்கி) போந்த போந்த பசசிமபூமிகளிலுள்ள சிவனார்பதிகளிலும் அடியார்பதிகளிலுந் தவறாது என ஆற்றொழுக்காகப் பொருள்கொள்ளக் கிடத்தலால் இங்குக் 'குடபுலம்' என்ற சொல்லுக்குப் பச்சிமபூமி யென்று பொருள் கொள்வதே நேர்மையுடையதாயிருக்கிறது. இதுவே பெரியபுராணமுடையார் கருத்தாமென்பதை, அவரே பிறிதோரிடத்தில், "கொங்கிற்குடபுலம் சென்றணைந்தார் கோதின் மெய்ஞ்ஞானக் கொழுந்தனையார்" என்றதில், கொங்குநாட்டை வியாபகமாகிய இடமாகவும், குடபுலத்தை அக்கொங்கின் ஏகதேசமாகிய பச்சிமபூமியாகவுங்கொண்டு கொங்கின்கண் என நன்குணரும்படி கொங்கிற்குடபுலம் எனக் கூறியவாற்றானறிக.

ஆகலாற் "சென்ற சென்ற குடபுலத்து" என்ற பெரியபுராணத்துட் சொல்லப்பட்ட குடபுலம் என்பதற்கு, சேரமண்டலம் என்று பொருள்கொள்வது நேர்மையில்லாததாயும், ஆசிரியர் கருத்தொடு பொருந்தாததாயும், அசம்பாவிதமாயுமிருப்பதால் அதனையொழித்து நேர்மையுடையதும், ஆசிரியர்கருத்தொடு பொருந்துவதும், சம்பாவிதமாயுள்ளதுமான பச்சிமபூமி யென்பதே பொருளாமாதலாலிதுவும் வாதககக்ஷிக்குச் சாதகமாகாது, எதிர்வாதககக்ஷிக்கே சாதகமாயிருக்கிறது.

இங்ஙனமாகவே, குடபுலங்காவலர்மருமான்" * என்பதிற் குடபலம் என்பது சேரமண்டலவாசகமாயிருப்பதுகண்டு, சென்றசென்ற குடபுலத்தென்ற சேக்கிழார்வாக்கைக் கொண்டு, கொங்கு சேரமண்டலமாகுமென்று துணிதல், "தென்புலங்காவலர்மருமான்" † என்பதிற் றென்புலமென்பது பாண்டியமண்டலவாசகமாயிருப்பது கண்டு, "தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்கறானென்

---

* சிறுபாணாற்றுப்படை—அடி ௪௭

† சிறுபாணாற்றுப்படை—அடி ௬௫.

றாங், கைம்புலத்தாறோம்பறலை" † என்ற தேவர்வாக்கைக்கொண்டு, பாண்டியமண்டலத்தாரைந் தெய்வத்தினு மூற்படவோம்புதலே தலையினுந்தலையாய வில்லறமென்று துணிவதுபோலும் அது மானுபாசமாய் அப்பிரமாணமாமென வறிக.

(தொடரும்.)

சேந்தமிழ்.

ஸ்ரீ:

பத்திரிகை யாராய்ச்சி.

ஆண் கொசுவும் பெண் கொசுவும்.

கொசுகுகளில் ஆண் இனங்கள் எப்போதுமே ஸாதாரணமாகத் தீங்கு உண்டுபண்ணாத நல்ல ஜந்துக்கள். ஸஹஜமாகவே ஆண் கொசுகுகள் சாகபக்ஷணிகள். செடி கொடிகளுடைய சாறுகளை உறிஞ்சி வளர்ந்துவருகின்றன. ஆனல், பெண் கொசுகுகளோவென்றால் எப்போதுமே மாமஸாஹாரங்களாற் பிழைத்துவருகின்றன. பெண் கொசுகானது மிருகங்கள் பக்ஷிகள் ஊர்வன மனிதர் ஆகிய இவர்களினுடைய சதைகளைத் தொளைத்து ரத்தத்தை உறிஞ்சுகின்றது. பெண்கொசுகு நமது அறைகளில் நமக்கு உபத்திரவத்தை யுண்டுபண்ணிக்கொண்டு நம்மைச்சுற்றியே திரிவதை வழக்கமாகப் பார்க்கிறோம். இவ்வாறு நமது ரத்தத்தைக் குடித்துக்கொண்டே சிலநாளில் தண்ணீரிற்சென்று முட்டையிடும். மறுபடியும் மனிதர் முதலிய பிராணிகளிடம் வந்து ரத்தத்தைக்குடித்துவிட்டுச் சிலநாட்களுக்குப்பிறகு தண்ணீரிற் சென்று முட்டையிடும். ஒவ்வொரு தடவைக்கும் நூற்றுக்கணக்கான முட்டைகளை யிடுவதால், அநேக கொசுகுகள் உண்டாகக் காரணமாகின்றது.

வைத்தியகலாநிதி.

---

† திருக்குறள்—௫—ஆவது அதிகாரம் இல்வாழ்க்கை செய் ௩.

புதுக்கோட்டை ராஜ்யம்.

10-ம்தொகுதியின் 8-ம்பக்கத் தொடர்ச்சி.

———:(‡)⌘(‡):———

தேவஸ்தான நிலங்களும் தர்மஸ்தாபன நிலங்களும் தனிமையாகக் கவனிக்கப்பட்டுத் தனிமையாகவே கணக்குவைக்கப்பட்டும் வந்தன. ஜாகீர்நிலங்களெல்லாம் ஸமஸ்தானப் பாதுகாப்பிலேயே இருந்தன. ஆனால் அவற்றுள் ஒன்றாகிய ராணிகளுக்காக விடப்பட்டிருந்தநிலங்கள்மாத்திரம் இந்தப் பாதுகாப்பிற் சேர்க்கப்படவில்லை. மேலரண்மனை நிலமானது 1881—ம் வருஷத்தில் மீண்டும் கைக்கொள்ளப்பட்டிருந்தது. மற்றொருஜாகீராகிய சின்ன அரண்மனை நிலமானது 1903—ம் வருஷத்தில் அந்தஜாகீர்தார் இறந்தவுடன் கைக்கொள்ளப்பட்டது. சென்ற பசலியில் மானவர்த்தி ஜாகீர் நிலங்களுங்கூட ஸமஸ்தான நிலங்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. 1897—ம் வருஷத்தில், கோவில் சத்திரம் முதலிய தர்மஸ்தாபன நிலங்களும் ஸமஸ்தானத்தாரால் எடுத்துக்கொள்ளப்பட்டு அவன் நிலங்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டன. அந்தந்தத்தர்மஸ்தாபனங்கள் ஸமஸ்தான விசாரணையின்பேரில் நடந்துவருகின்றன. ஆக இவ்வகையான ஒழுங்குகளால் எல்லாநிலங்களும் ஸமஸ்தான விசாரணைக்கு உட்பட்டு நன்றாக நடைபெற்று வருகின்றன.

தர்பாருடைய அநுமதியின்பேரிலும் ஆதரவின்பேரிலும் ஒரு வேளாண்சங்கம் ஏற்படுத்தப் பெற்று, தற்காலமுறைப்படி உழைத்துக்கொண்டுவருகிறது. அந்தச்சங்கமானது சாதாரண குடியானவர்கட்கும் லாபம்காட்டித்தரும் வழியில் உழைத்துவருகிறது. அச்சங்கத்தை யநுசரித்து ஒரு நிலமானது கஸ்பாவில் ஒரு தேர்ச்சிபெற்ற வேளாண்டொழிலினரது மேற்பார்வையுடன் பண்படுத்தப்பெற்றுவருகிறது. தர்பார் அவர்களால், நிலச்சாதனம் பெற்றவர்கட்கு, விதைவாங்குதல் கிணறுதோண்டுதல் முதலிய வேளாண் டொழிலுக்கென்று கடன்களும் கொடுத்துதவப் படுகின்றன. புதிய புதிய விதைகளையும் கிணறுவெட்டும் கருவிகளையும் அவற்றையாளுந்தொழிலாளிகளையும் தர்பார் அவர்கள் ஜனங்கட்குச் சுலபசாத்தியமாகக் கிடைக்கும்படி செய்துதவுகிறார்கள். விலங்கினங்கட்கு நோயுண்டானல் அவற்றைப்போக்கற்குரிய வைத்தியசாலை

கள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வந்து ஜனங்களால் நன்கு மதிப்பையும் பெற்றிருக்கின்றன. கூட்டுத்தொழில் கடன் கொடுக்கும் சங்கத்துக்கு ஆகவேண்டிய விதிகள் ஏற்பட்டுச் சில சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்விக்கப்பெற்றன. சர்க்கார் அவர்களும் சென்ற பல வருஷங்களாக நிலச்சுவான்தார்களது தொழில் முயற்சியில் வெறுப்புக்காட்டாமல் இணக்கங்காட்டி அவர்களுக்கு உத்ஸாகத்தைக் கொடுத்துவந்திருக்கிறார்கள்.

பத்திராதிபர்.

ஊண் பித்தியார்.

ஊண்பித்தியார்:—என்றழைக்கப்பெறும் இவர் குறுந்தொகை ஏடுகளில், ஊண்பித்தி—ஊண்பித்தி—ஊண்பிச்சி—எனவும், புறநானூற்றில் மாற்பித்தியார் எனவும், சில புறப்பாட்டு மூலப்பிரதிகளில் ஊண்பித்தியார் எனவும் சுவடி எழுதுவோரால் பலதிறப்படப் பெயர் வாய்க்கப்பெற்று வழங்கப்படுவார். இவர் பெண்பாற்புலமையாளர்; சங்ககாலத்தவராகக் கருதப்படுகின்றார். இவரது இயற்பெயர் பித்தியார் என்பதாம்.

தொன்னூலுரையாசிரியர்களாக வாய்ந்தவருள் செய என் வாய்பாட்டு வினையெச்சம் செய்து என்வாய்பாட்டுவினையெச்சமாகத் திரிந்தது என்பாரும், செய்து என்னும் எச்சம் செய என் எச்சப்பொருட்டாக நின்றது என்பாரும், இருவாறுகூறுவாருமாகித் தம்முள் இகலியுரைகண்டார் பலரும், இவர் பாடிய குறுந்தொகைப் பாட்டின்கணும்— "உரற்கால்யானையொடித்து நந்திசிய" — என்ற அடியினைச் செய்யுள்வழக்காக யாண்டும் எடுத்துக்காட்டுவர். அன்னோர் காட்டும் அவ்வடியுள்வரும் 'உண்டெஞ்சிய' என்ற சொல்லையுரிமையால், ஊண் என்ற அடைமொழி பெற்று ஊண்பித்தியார் என இவர் வழங்கப்பெற்றார் என்றல் ஓர் யூகமாகும்.

அல்லதூஉம் கருப்புநிறமுற்ற யாட்டினை வெள்ளாடென்றாற்போன்று, தசைகளைப் பிரிந்த பெருந்துயரால் ஊனை விலக்கி அதிலுற்றமை காரணமாக ஊண்பித்தியார் என்றலும் ஒன்று.

மொழி நூல் (பாஷாதத்துவசாஸ்திரம்) என ஒன்று தனிப்படக் காணற்கு அரிய இக்காலத்து அறியக்கூடியவை இவ்வளவே. நிற்க.

இவரது கணவனாகவாய்த்தார், இல்லறப்பற்றினை விடுத்துச் சோலைகள் அடர்ந்த மலைப்புறம் தவஞ்செய்யச் சென்றார். அவர் சென்ற நிலையறியாத இவர் தங்கணவரின் வரவைப் பன்னாள் நோக்கியும் வாராமையால், 'தங்கொழுநர் தம்மை மறந்து நினைக்கிலரோ' 'ஒரோவழி அகத்து நினைந்தும் மீளற்கு வழியிலாமையின் வந்திலரோ'—என எண்ணமிட்டார் ('உள்ளியும், வாயுணர் வின்மையின் வாரார் கொல்லோ'—குறுந்-232).

பன்னாள் தம்முறைவிடத்தே காத்திருந்தும் வாராமையினால் இறுதியில் தாமே தம் உரியவரைத் தேடிச்சென்று, காட்டகத்தை யடைந்து, சடைமுடிபாரத்துடன் தவக்கோலம்பூண்டுவிளங்கும் அவரைக்கண்டார்; யானை முதலிய கொடிய விலங்குகளும், தவமிகுதியால் தங்கணவற்கு விறகு முதலியவற்றைக் கொணர்ந்து (புறநா—251—உரை) அளிப்பனைக்கண்டு வியந்தார். முன்பு தம்மை அன்பான சொற்களால் உளப்படுக்கியவர் இவரே அறிந்தார். இவர் கூற்றாகவரும 'இல்வழங்கு மடமயில் பிணிக்கும், சொல்வலை வேட்டுவன்' (புறம்-252) என்றல் பாராட்டத்தக்கதாகும். இவர் பாலைத் திணையையும் அகப்புறமாகிய வாகைத் திணையையும் எடுத்துப் பாடியுள்ளார். இவர் பாடியனவாகக் குறுந்தொகையுள் **232**ம்பாட்டும் புறநானூற்றுள் **251-252**ம்பாட்டுகளுமாக மூன்றுபாட்டுகள் கிடைத்திருக்கின்றன. தொல்காப்பிய உரையாசிரியர்கள் தாபதவாகைக்குக் காட்டாக இவர்பாடிய புறப்பாட்டுகளை எடுத்து ஆட்சி செய்திருக்கின்றனர். தாபதவாகை பாலைத்திணையின்புறனாய வாகைக்கு உரியது,

இத்தகைய பெண்பாற் புலமையாளர்பாக்களைப் பிற்காலத்தவர் திணை துறைப்படுத்தித் தொகைநூலுட் கொண்டனர்.

பெயர்விழையான்.

சபைநிகழ்ச்சிக் குறிப்புகள்.

:0-0-0:

புதுக்கோட்டைச் சமஸ்தானத்திய வாசகப்புத்தகசாலை முதல் மகாநாடு, ஆலங்குடி.

1918.

தென்னிந்தியாவிற்கு நவீனமான, இம்மகாநாடானது, நமது சமஸ்தானத்தில், முதன்முதலாக, ஆலங்குடி, "ஸ்ரீ மார்த்தாண்டகிளப்" (வாசகசாலை, புத்தகசாலை) ஆதரவில், காரியதரிசியின் முயற்சியால் 25—1—18ல், கூடிற்று. மேன்மைபொருந்திய திவான் ம-கா-ா-ா-ஸ்ரீ விஜயரெகுநாத துரைராஜா அவர்கள் B. A. கிருபைகூர்ந்து அக்ராஸனம் வகித்தார்கள். சமஸ்தானத்திலுள்ள பதினேழு வாசகப்புத்தகசாலைகளில் 10 சங்கங்கள் பிரதிநிதிகளை அனுப்பின. புதுக்கோட்டையிலிருந்து விஜயஞ்செய்த கனவான்களில் அடியிற்கண்டவர்கள் அக்ராஸனாதிபதியவர்களின் பக்கத்தில் வீற்றிருந்தார்கள். Messres பத்மநாபசாஸ்திரிகள் அவர்கள் (2-வது ஜட்ஜ்) சங்கரராமேச்வரையர் அவர்கள் B. A. (ஸ்கூல் ஸூப்ரிண்டெண்ட்) S. T. ராமச்சந்திர சாஸ்திரிகள் அவர்கள் B. A. (காலேஜ் பிரின்ஸ்பால் தியாகராஜய்யர் அவர்கள் MA.L.T., S. நாராயணசாமி ஐயர் அவர்கள் B. A. (மாஜி கல்வி இலாகா தலைவர்) சுமார் 500 ஜனங்களுக்கு மேற் கூடியிருந்தார்கள். புத்தகசாலைக் கண்காட்சியில், இங்கிலாந்து, அமெரிக்கா, பரோடா, ஆந்த்ரதேசம், மைசூர் முதலிய இடங்களிலிருந்து சாஸ்திர சம்பந்தமான புத்தகங்களும், இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் பிரசுரமாகும் தினசரி, வாராந்தர, மாதாந்தர முதலிய சமாசாரப்பத்திரிகைகளும், கைத்தொழில், பூகோளம், சரித்திரம், உடற்கூறு, தாவரம், பிராணிவர்க்கம், சம்பந்தமான படங்களும், பட்டுப்பூச்சிகளும், இன்னும் மற்ற கல்வி சம்பந்தமான படங்களும், பார்ப்பவர் மனதைக் கவரும்படிக்கும், விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளும்படிக்கும் வைக்கப்பட்டிருந்தன.

அக்ராஸனாதிபதியவர்களைப் பேட்டையார்கள் முன்னின்று மேளகோஷத்துடன் ஊர்வலமாக அழைத்துவர, உபசரணைச் சங்கத்தின் அங்கத்தினர்களும் மற்ற கனவான்களும் எதிர்கொண்டு நல்வரவுகூற, மத்தியதரக் கலாசாலை வாலண்டியர்கள் புடைசூழ, தலைவரவர்கள், கண்காட்சி ஹாலுக்குச்சென்று "கண்காட்சியை" திறந்துவைத்துக் கண்ணுற்று ஆனந்தமடைந்தார்கள். பின்னர் மகாநாடு கூட்டப்பட்டிருக்கும் ஹாலுக்குச் சென்று, காதுசெவிடுபடும்படியான கரகோஷத்தினிடையே அக்ராஸனத்திலமர்ந்தார்கள். கடவுள் துதி, கல்வி அபிவிர்த்தி, வாசகப்புத்தகசாலைகளின் உபயோகம் இவைகளைப்பற்றிப் பெண்பாடசாலை மாணவிகளும் மத்யதரகலாசாலை மாணவர்களும் முறையே நன்கு சம்பாஷித்தார்கள். பிறகு உபசரணைச்சங்க அக்ராஸனாதிபதி, ம-கா-ா-ா-ஸ்ரீ. K. வெங்கட்டராமையர் அவர்கள் (ஆலங்குடி, மத்யதர கலாசாலைத்தலைமை ஆசிரியர்) அக்ராஸனாதிபதி, பிரதிநிதிகள், மற்ற கனவான்கள் இவர்களை உபசரணைச்சங்கத்தாருக்காக நல்வரவுகூறி நீண்டதோர் உபந்யாசம் ஆங்கிலத்திற்செய்தார்கள். தமிழிலும் அது படிக்கப்பட்டது. அக்ராஸனாதிபதியவர்கள் இடைவிடாத கரகோஷத்தினிடையே, மகாநாட்டைத் திறந்துவைத்து ஆரம்பப்பிரசங்கத்தை ஆங்கிலத்தில் வெகு உருக்கமாகவும், இனிமையாகவும், புளகாங்கிதமாகும் வண்ணம் செய்தார்கள்.

அவ்வுபந்யாசத்தை ம-ா-ா-ா-ஸ்ரீ தியாகராஜையர் அவர்கள், தமிழிற் படித்தார்கள். பின்பு, சமஸ்தானத்தில் வாசகப்புத்தகசாலைகள் ஆங்காங்கு ஏற்பட்டுத் தழைத்தோங்குவதற்குற்ற 13 விஷயங்கள் பிரதிநிதிகளால் வ்யவகரிக்கப்பட்டுத் தீர்மானத்திற்குவந்தன. பிரதிநிதிகளும் மற்றக் கனவான்களும் சிற்றுண்டி உண்டுவந்தபின்னர்க் கிராமாந்தரங்களிற் புஸ்தகசாலைகள் ஏற்படுத்தும்விதமெப்படி என்ற வியாஸம் தமிழிலும், கல்வி, பட்டுப்பூச்சிவளர்ப்பு முதலிய வியாசங்கள் முறையே ஆங்கிலத்திலும் தமிழிலும் பற்பலவித்வான்கள் படித்தார்கள். வாசகப்புத்தகசாலைகளின் உபயோகத்தைப்பற்றி, தமிழிற் போட்டிவியாஸம் நன்கு எழுதியிருந்ததற்காகச் சமஸ்தானக்கல்லூரி மாணவரிருவருக்கு, வெள்ளிப்பதக்கமும், சித்திரத்தில் தேர்ச்சிக்காக ஆலங்குடிக்கலாசாலைச் சித்திரபோதகருக்கு வெள்ளிப்பதக்கமும், மற்றவர்களுக்கு யோக்ய தாபத்திரங்களும், பரிசளிக்கப்பட்டன. பற்பலசங்கங்களின் அறிக்கைப்பத்திரங்கள் படிக்கப்பட்டன. இறுதியில் அக்ராஸனாதிபதியவர்கள், சட்டாயக் கல்வியைப்பற்றிய பிரச்னை ஸ்ரீ தர்பாரவர்களுடைய ஆலோசனையிலிருந்து வருகிறதென்றும், வாசகப்புத்தகசாலையின் அபிவிருத்தியின்பொருட்டுத் தீர்மானிக்கப்பட்ட விஷயங்களை ஸ்ரீ தர்பாரவர்கள் நன்கு கவனிப்பர்களென்றும், சொல்லி மீண்டதோர் முடிவுரை மிகுந்த உற்சாகத்துடன் கூறினார்கள். மறுவருஷம் இம்மகாநாடு புதுக்கோட்டையிற் கூடவேண்டுமென்று, சமரச சன்மார்க்க தமிழ்ச்சங்கத்தின், காரியதரிசி களழைக்கச் சபையோரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்பு உபசாரணைச்சங்கத்து அக்ராஸனாதிபதியவர்கள் அக்ராஸனாதிபதியவர்களுக்கும் மற்ற கனவான்களுக்கும் வந்தனோபசாரங்கூற, ம-ா-ா-ா-ஸ்ரீ. மகாராஜா, மகாராணி இவர்கள்பேரில் வாழ்த்துக்கீதம்பாட அக்ராஸனாதிபதியவர்கள்பேரில் ராயபுரம் பாலகவி நல்லையஆசாரியும் தஞ்சைத் தமிழ்வித்துவான் கோவிந்தசாமிபிள்ளை அவர்களும் மங்கலவாழ்த்துக் கவிகளுரைக்க, கடவுளருளால் மகாநாடு எல்லாவிதத்திலும் நன்கு நடந்தேறியது.

26—1—18.

மகாநாடுபிரயுக்தமாக இன்று நெளூர்த் தமிழ்வித்வான் பிர்ம்மஸ்ரீ நரஸிம்மாசாரியார், தஞ்சைவித்வான், தமிழ் முனிவர் மகாராராஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை இவர்கள் ம-ா-ா-ா-ஸ்ரீ ரெங்கசாமிஐயர் அவர்கள் B. A. B. C. E. அவர்கள் அக்ராஸனத்தின்கீழ் முறையே, பாதுகாபட்டாபிஷேகம், மானிடவியல்பு என்னும், விஷயங்களைப்பற்றிப் பற்பல மேற்கோள்களுடன் உபந்யஸித்தார்கள்.

புதுக்கோட்டை சமஸ்தானத்திய, வாசகப்புத்தகசாலை முதல்மகாநாடு
ஆலங்குடி. 27-1-18.

A. S. முத்து கிர்ஷணன்.
உபசாரணைச்சங்கம், காரியதரிசி.

132

புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் வாசகப் புத்தகசாலை முதல் மகாநாடு, ஆலங்குடி

தீர்மானிக்கப்பட்ட விஷயங்கள்.

25-1-98

---

1. பிரகிருதம் ஐரோப்பாவில் நடைபெறும், கொடிய மகாயுத்தம், சீக்கிரமொழிந்து நேசகக்ஷியார்களுக்கு ஒப்பிலா வெற்றியை அளிக்க ஸர்வேசுவரன் கருணை புரியும்படி இம்மகாநாடு பிரார்த்திக்கின்றது.

2 ஸமஸ்தானத்தில் கல்வி சீக்கிரத்தில் பரவும்பொருட்டும், வாசகப் புத்தகசாலைகள் அபிவிருத்தியடையச் சாதகமாயிருக்கவேண்டியதன்பொருட்டும், தற்காலம் இனாமாக அளிக்கப்பட்டுவரும் பிரதமக்கல்வியைக் கட்டாயமாக்க வேணுமாய் இம்மகாநாடு பிரார்த்திக்கின்றது.

3. ராஜதானியாகிய புதுக்கோட்டை நகரில், நல்லகட்டடத்துடனும், வசதிகளுடனும் ஓர் உயர்வான மத்தியபுத்தகசாலையை ஸ்ரீ-தர்பாரவர்கள் ஏற்படுத்தவேணுமாய் இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

4. தாலூகாக்களில் ஏற்பட்டிருக்கும் சங்கங்களுக்கு ரூ. 5-க்குக்குறையாமல் வருஷாந்திர திரவியசகாயமும், மற்றகிராமாந்தர சங்கங்களுக்கு அவைகள் ஏற்பட்டிருக்கு மிடத்திற்குத் தக்கவாறு, திரவிய சகாயமும் செய்யவேணுமாய் இம்மகாநாடு ஸ்ரீ-தர்பாரவர்களைப் பிரார்த்திக்கின்றது.

5. பரோடா, மைசூர், ஆந்திரதேசம், முதலிய இடங்களில் இச்சங்கங்கள் எப்படி வேலைசெய்துவருகிறதென்பதை அறிந்துவரத் திறமைசாலியான ஓர் பட்டதாரியை அனுப்பவேணுமாய் ஸ்ரீ-தர்பாரவர்களை இம்மகாநாடு பிரார்த்திக்கின்றது.

6. பரோடா தேசத்தில் ஏற்பட்டிருப்பதுபோல் (Travelling Library) பிரயாணம்செய்யும் புத்தகசாலைகள், வேலைசெய்ய, சிப்பந்திகளையும், மற்ற ஒத்தாசைகளையும் செய்யவேணுமாய் ஸ்ரீ-தர்பாரவர்களை இம்மகாநாடு பிரார்த்திக்கின்றது.

7. பொதுஜனங்களுக்கு உலகஅற்புதங்கள், விவஸாயம், சுகாதாரம், பூகோளம், சரித்திரம், இவைபோன்ற விஷயங்களில் அறிவு புகட்டுவதற்குத்

தாலூகா சபைகளுக்கு (Magic Lantern) நிழற் படக்காட்சி யந்திரமும் படங்களுடன், வாங்கிக்கொடுக்கவேணுமாய் ஈ-தர்பாரவர்களை இம்மகாநாடு பிரார்த்திக்கின்றது.

8. ஸமஸ்தானத்தில் பிரசுரிக்கும் கெஜெட்டுகள், நிர்வாகரிபோர்ட்டுகள் புத்தகங்கள் இவைகளை ஆச்சங்கங்களுக்கு இனாமாக அளிக்கவேண்டுமென்று இம்மகாநாடு ஈ-தர்பாரவர்களை வேண்டிக்கொள்ளுகிறது.

9. ஸமஸ்தானப்பிரதிநிதி சபையில், வாசகப்புத்தகசாலைகளின் பிரதிநிதிகளாக குறைந்தது இரண்டு நபர்களைத் சேர்ந்தெடுக்கும் பாத்தியதையை ஐக்கியச்சங்கங்களுக்கு கொடுத்திருப்பதைப்போல், கிருபைகூர்ந்து அளிக்கவேணுமாய் இம்மகாநாடு ஈ-தர்பாரவர்களைப் பிரார்த்திக்கின்றது.

10. வாசகப்புத்தகசாலைக் கட்டிடங்களுக்கும், அநாதைப்பிள்ளைக் குழந்தைகளுக்குக் கல்விசம்பந்தமான விளையாட்டுகளை விளையாடுவதற்கு இனாமாக இடமும், கட்டிடகிராண்டும், சாமான்களுக்குக்கிராண்டும், மைசூர் பரோடா, முதலிய ஸமஸ்தானங்களில், கொடுப்பதுபோல், இங்கேயும் கொடுக்கவேணுமாய் ஈ-தர்பாரவர்களை இம்மகாநாடு பிரார்த்திக்கின்றது.

11. மகமதியப் பாடசாலைகளைப்பராமரிக்க, அரபிபாஷை, குரான், இவைகளில் நிபுணத்துவமுள்ள ஓர் இன்ஸ்பெக்டரை நியமிக்கவேணுமாய் ஈ-தர்பாரவர்களை இம்மகாநாடு பிரார்த்திக்கின்றது.

12. நவராத்திரிப் பண்டிகையில், ஸமஸ்கிருத வித்வான்களுக்குப் பரிசளிப்பதுபோல், தமிழ் வித்வான்களுக்கும் பரிசளிக்கவேணுமாய் இம்மகாநாடு ஈ-தர்பாரவர்களை வேண்டிக்கொள்ளுகிறது.

13. வாசகப்புத்தகசாலை மகாநாடும், புத்தகசாலைக் கண்காட்சியும், வருஷந்தோறும், வெவ்வேறிடங்களில் நடைபெறும்படி செய்யவும் இவைகளை ஏற்படுத்தவும், மேற்பார்க்கவும், "புதுக்கோட்டை ஸமஸ்தானத்திய வாசகப் புத்தகசாலை மத்யசங்கம்" என, ஓர் ஸ்தாபனத்தை புதுக்கோட்டையில் ஏற்படுத்தவேணுமாயும், அம்மத்தியசங்கத்திற்கு இம்மகாநாட்டில் கூடியிருக்கும் பிரதிநிதிகள் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுத்தும், வேலைநடப்பதற்குரிய சட்டங்களைச் செய்தும் வரவேணுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

சி. டி. முத்துகிருஷ்ணன்,

காரியதரிசி.

வித்யாபரிபாலனசங்கம்.

நாட்டரசன்கோட்டை

7—4—18 பிங்களஃபங்குனிமீ உடுஉஞாயிற்றுக்கிழமை பகல் 3-மணி முதல் வித்யாபரிபாலனசங்கத்தின் பன்னிரண்டாவது மாதாந்தக்கூட்டம் நடைபெற்றது. சிவகங்கைவக்கீல் மிஸ்டர் ஜெ. வெங்கிட்டராமையரவர்கள் அக்ராஸனம் வகித்தார்கள். கடவுள் வாழ்த்து வழக்கம்போல் கம்பர்கலாசாலை மாணவர்களால் செய்யப்பட்டது முதலில் கம்பர்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமாந் வெள்ளைவாரணம் பிள்ளையவர்கள் பக்தியென்றெடுத்து அதைச் சமய சம்ப்ரதாயமாகப் பொருளமைதிகாட்டிப் பிரசங்கித்தார்கள். இரண்டாவது பண்டிட் ஸ்ரீமாந் கணபதியாபிள்ளையவர்கள் பக்தியையேஆதாரமாகக்கொண்டு உண்மையன்பு இதுவெனவும் அதுவே வேண்டுவதெனவும் போலியன்பு கூடாதெனவும் விரித்துப்பிரசங்கித்தார்கள். மூன்றாவது மதுரைக் காலேஜ் மாணவர் மிஸ்டர் சுந்தரமையரவர்கள் தமிழ்க்கல்வியை ஆதரிக்கவேண்டுமென்னும் நோக்கத்தைக் கொண்டு பக்தியை அதிலமைத்துத் தெளிவாய்ப்பிரசங்கித்தனர்கள். நான்காவதாகக் கம்பர்கலாசாலைத் தலைமையாசிரியர் பண்டிட் வைத்தியலிங்கம்பிள்ளையவர்கள் காலவியல்புக்கேற்பப் பக்தியென்பது தமிழ்க்கல்வியிலும் தேசநலத்திலும் செலுத்தப்பட வேண்டுமென்று விரித்துப் பிரசங்கித்தார்கள், கடைசியாக அக்ராஸனாதிபதியவர்கள் பக்தியை ஈசுரபக்தி ராஜபக்தி தேசபக்தி நாயக நாயகிபக்தி மாதுர் பிதுர் பக்தியென்ப் பாகுபாடுசெய்து விளக்கி முடிவுரைகூறினார்கள்.

காரியதரிசி.

பிழைதிருத்தம்

சென்ற சஞ்சிகை இலக்குமி தோத்திரத்தில்.

பிழைகள்;— மூன்றாம்பாட்டு இரண்டாமடியில் "எடுத்கவர் பாற் பேசும" என்பதற்கு "எடுக்கவர் பாற்பேசும்" என்றும், ஒன்பதாம்பாட்டு முதலடி இரண்டாஞ்சீரில் "நிலைபா" என்பதற்குக் ககர உயிர்மெய் சேர்த்து "நிலைபாக" என்றும் பிரிக்கப்பட்டிருப்பனவாம்.